விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 02 சனிக்கிழமை (18.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 273

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## மட்டு. கரடியனாற்றில் அனர்த்தம்

# டைனமற் கொள்கலன் வெடித்ததில் 25 பேர் பலி!



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கரடியனாற்றில் பொலிஸ் நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற வெடிப்புச்சம்பவம் ஒன்றில் பொலிஸார், பொதுமக்கள் மற்றும் இரண்டு சீன பிரஜைகள் உட்பட 25 பேர் உயிரிழந்ததாகவும். மேலும் 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நெடுஞ்சாலை அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டுள்ள சீன நிறுவனம் ஒன்றினால் பொலிஸ் நிலைய வளாகத்திற்குள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கொள்கலன் ஒன்றிலேயே இவ் வெடிப்புச்சம்பவம் இடம் பெற்றதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (16ஆம் பக்கம் பார்க்க)

## முறையான விசாரணை நடத்த ஜனாதிபதி மகிந்த பணிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு கரடியனாறில் நேற்று முற்பகல் இடம் பெற்ற பாரிய வெடிப்புச்சம்பவம் குறித்து உடனடியாக முறையான விசாரணை நடத்துமாறு பதில் பாதுகாப்புச்செயலாளர் லலித் வீரதுங்கவுக்கும் பொலிஸ்மா அதிபர் மகிந்த பால சூரியவுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

தற்போது அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தனது அனுதா (16ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ஜயரட்ண மட்டுவுக்கு நேரடி விஜயம்

(கொழும்பு)

பிரதமர் தி.மு.ஜயரட்ண நேற்றுமாலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குச் சென்று கரடியனாறு பொலிஸ் நிலைய வளாகத்தில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் காய மடைந்த பொலிஸ் மற்றும் பொதுமக்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்குமாறு வைத்தியசாலை அதிகாரிகளுக்கு பிரதம மந்திரி உத்தரவிட்டார். (16ஆம் பக்கம் பார்க்க)

## சீன அரசாங்கத்தின் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

மட்டக்களப்பு கரடியனாறு பகுதியில் இடம்பெற்ற பாரிய வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த இரு சீன பிரஜைகள் தொடர்பாக சீன அரசு விசாரணைகளை நடத்துவதாக சீன தூதுவராலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பிலுள்ள சீன தூதுவருடன் சீன தூதுவராலய உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழுவொன்று வெடிப்புத் தொடர்பான தகவல்களை நேரடியாகத் திரட்டுவதற்காக நேற்று மாலை கரடியனாறு (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ஆணைக்குழு கிளிநொச்சியில் கூடுகின்றது

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மூலமான அனுபவங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு இன்றும் நாளையும் இரண்டு நாட்கள் கிளிநொச்சியில் கூடி பொது மக்களின் சாட்சியங்களை பதிவு செய்யவுள்ளது. அத்துடன் எதிர்வரும் 20ஆம் திகதி ஆணைக்குழு கிளிநொச்சியில் கூடவுள்ளது. இதன்போது (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மனித உரிமை மீறல் குறித்து ஐ.நா.குழுவின் விசாரணை ஆரம்பம்!

(கொழும்பு)

இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்பு சுமத்தும் வழிமுறைகள் குறித்து ஐ.நா. தலைமைச் செயலருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழு தனது பணிகளை ஆரம்பித்துள்ளதாக ஐ.நா. அறிவித்துள்ளது.

ஐ.நா. தலைமைச் செயலருடனான சந்திப்பு ஒன்றை அடுத்து இந்தக் குழு தனது பணிகளை ஆரம்பித்திருப்பதாக ஐ.நா. தலைமைச்செயலர் பான் கீ மூனின் சார்பில் பேசவல்ல அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஐ.நா.குழுவை எதிர்த்து இலங்கையில் நடத்தப்பட்ட (16ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் இன்று 517 பேர் மீள்குடியமர்வர்

### அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குடத்தனை நிவாரண நலன்புரி நிலையத் திலிருந்து செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று தெற்கு, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய வடமராட்சி கிழக்கினைச் சேர்ந்த 175 குடும்பங்களைச் சேர்ந்த 517 அங்கத்தவர்கள் இன்று அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமரவுள்ளார்கள் என (16ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் தளபதி பொன்சேகாவுக்கு மூன்று வருடகால சிறைத்தண்டனை


### இரண்டாவது இராணுவ நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு இரண்டாவது இராணுவ நீதிமன்றம் நேற்று மூன்று வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

ஆயுதக் கொள்வனவு மோசடி தொடர்பாக விசாரித்த நீதிமன்றம் சரத் பொன்சேகா குற்றவாளியாகக் காணப்பட்டதால் அவருக்கு மூன்று வருடங்களுக்குக் குறையாத தண்டனை வழங்க (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





இலங்கை மின்சார சபையின் வடவலய மாகாண அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற நீர் மின்சாரத்தின் தந்தை பீ.ஜே.விமல சுரேந்திராவின் பிறந்த தின நிகழ்வில் உதவிப் பொது முகாமையாளர் முத்துரட்ணா னந்தம் நினைவுரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பணியாளர்களையும் முதலிரு படங்களிலும் யாழ். அரசடி மின்பாவனையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டவர்களை மற்றைய படத்திலும் காணலாம் (படங்கள் – சுதாகர், கரன்)

# மரண அறிவித்தல்

## சந்திரசேகரம் பவானிதேவி



வளாக வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் பவானிதேவி 17.09.2010 நேற்று (வெள்ளிக்கிழமை ) காலமாகி விட்டார்.

அன்னார் சந்திரசேகரத்தின் மனைவியும் வல்லிபுரம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் அச்சுதன், அரங்கனா, நிரோஜன், நிராதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பரமேஸ்வரி, பஞ்சநாதன், பத்மராஜா, பவளராணி, பாக்கியநாதன், பராசக்தி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் 'அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வளாக வீதி
திருநெல்வேலி.

தகவல் :
குடும்பத்தினர்.

(2491)

## பேராசிரியர் ஜிப்ரி காலமானார்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் உறுப்பினரும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித் தலைவருமான பேராசிரியர் எம்.டி.எம் ஜிப்ரி நேற்று அதிகாலை காலமானார்.

பேராசிரியர் ஜிப்ரியின் ஜனாஸா நல்லடக்கம் நேற்று பிற்பகல் மூன்று மணிக்கு தெஹிவளை ஜும்மா பள்ளிவாசலில் உள்ள மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மாத்தறையை பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் ஜிப்ரி ஸ்ரீ.ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வைத்தியபீட பேராசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். (ச–5)

## கோண்டாவிலில் ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் குமரகோட்டம் வைரவர் ஆலய வெளிவீதியில் நேற்று முன்தினம் இரவு படையினரால் ஆயுதங்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் துப்பாக்கி ஒன்றைக் கண்டதாகவும் அது தொடர்பில் ஊரெழு இராணுவமுகாமிலுள்ள படையினருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் அங்கு சென்ற படையினரால் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒரு துப்பாக்கி மற்றும் இரு கைக்குண்டுகள் என்பனவே மீட்கப்பட்டதாக படைத்தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (எ–5)


## காணி விற்பனைக்கு

இணுவில் தியேட்டர் ஒழுங்கையில் கே.கே.எஸ் வீதிக்கு 50m தூரத்தில் சுற்றுமதில் கிணற்றுடன் சுவுய 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 3 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு :–
0778445323 (2483)



செல்லா சினிமா




காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00


## செயற்கைக் கால்கள் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 49 ஆவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு போர் மற்றும் அனர்த்தங்களால் கால், கையை இழந்த 20 பேருக்கு நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கு யாழ். ஜெய்ப்பூர் புனர்வாழ்வு நிலையத்தில் வைத்து செயற்கைக் கால்கள் வழங்கப் படவுள்ளன.

மக்கள் வங்கியின் இந்து மாமன்றத்தினரால் 4 இலட்சம் ரூபா செலவில் இச்செயற்கைக்கால்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் இந்து மாமன்ற உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் ஜெய்ப்பூர் நிறுவன பணியாளர்கள் கலந்துகொள்கின்றனர். (ச–5)


- A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
- வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
- உள்ளூரில் சுயமாகத் தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
- இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளீரே!

எமது 25 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

**இதோ உங்களுக்கான 3 மாத சான்றிதழ் பயிற்சிகள்**

கிழமைநாள் பயிற்சிகள் ஆரம்பம்: 22-09-2010

- கேக் ஐசிங்
- உணவு தயாரித்தல்
- கைவேலை
- கூந்தல் அலங்காரம்
- ப்ரிக் வர்ணம் தீட்டுதல்
- பூவேலை

மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் 15 நாள் Facial, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure, முடிஅயன்செய்தல், Perming, நிறமூட்டுதல், முடிவெட்டுதல் பயிற்சிகளும் நடைபெறும்.

தையல் அறிவு அற்றவர்களுக்கான 6 மாத உடை தயாரித்தல் பயிற்சிகள்
தையல் தெரிந்தவர்களுக்கான 15 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

மேற்குறிப்பிட்ட தையல் பயிற்சிகள் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறவுள்ளன.

ஆரம்பம்:
19-09-2010 (ஞாயிறு)

மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

25 வது ஆண்டில்
கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் – யாழ்ப்பாணம்

குறிப்பு : வடமராட்சி, தென்மராட்சி மாணவிகளுக்கு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் பெருந்திருவிழா நிறைவுபெற்றபின்னர் பயிற்சிக்கான விசேட அனுமதி வழங்கப்படும்
Guru



## தற்போதே அனுமதிகள்

JEF
Jaffna Education Fair 2010

இலவச ஆலோசனைகள்

India, Ukraine (Russia) MBBS
Switzerland , Spain, USA, UK

தொடர்புகளுக்கு:

Deanston House,
No:01,4th Floor,
Deanston Plase,
Colombo -03
0117902938, 0729994777

கிளை அலுவலகம்:
28, Tank Road,
Rambai Kulam,
Vavuniya.
0729994777

மேலும் உங்கள் தனியார் நிறுவனங்களை பதிவு செய்து கொள்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்படுவதோடு, செய்தும் கொடுக்கப்படும்.
அருமையான சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.
மேலதிக விபரங்களை
நேரில் பெற்றுக்கொடுக்க நாங்கள் தற்போது
யாழ் மண்ணில்

காலம் :– September 18th ,19th 2010
இடம் :– Jaffna Central College
(Stall N0:23)

(C-1204)

# இன்று ஒரு தகவல்

## மரணத்தின் மறுபக்கம்

மனித வாழ்க்கை என்பது மரணத்துடன் முடிந்து போகும் ஒன்று என்று தான் பல பேர் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

'மரணம்' என்பது என்ன?

மூச்சும் இதயத்துடிப்பும் நின்று போன பின் என்ன நடக்கிறது தெரியுமா?

உயிர் வெளியே போகிறது.

இந்த நேரத்தில் எப்படியான அனுபவம் ஏற்படும்?

இதைப்பற்றியெல்லாம் சில ஆராய்ச்சிகள் ஏற்கனவே நடந்திருக்கிறது. இன்னும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

இறக்கும் அனுபவத்தைப் பற்றி எப்படி ஆராய்ச்சி செய்வது என்று யோசிக்கிறீர்களா?

இந்த உலகத்தில் தினமும் எத்தனையோ விபத்துக்கள் நடக்கிறது. அதில் மரணத்தின் விளிம்பு வரை போய் திரும்பி பிழைப்பவர்களும் உண்டு.

அதாவது செத்துப் பிழைப்பவர்கள் உண்டு.

இவர்களையெல்லாம் சோதனை செய்து தான் இந்த ஆராய்ச்சியை நடத்துகிறார்கள்.

அப்படி செத்துப் பிழைத்த சிலரின் அனுபவம் எப்படி இருந்ததாம் தெரியுமா?

அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்...

ஒரு இருண்ட பாதையாம். அந்த இருட்டு வெளியில் சொல்ல முடியாத வேகத்தில் தள்ளப்பட்டது போல இருந்ததாம். அதன் பின் அவர்கள் உடம்பைவிட்டு வெளியே இருப்பது போல் உணர்ந்தார்களாம். அவர்களுடைய உடம்பை அவர்களே ஒரு அந்நிய மனிதன் மாதிரி பார்க்க முடிந்தது என்று சொல்கிறார்கள்.

ஒரு பெரிய கார் விபத்தில் செத்துப் பிழைத்த ஒருவர் என்ன சொல்கிறார் தெரியுமா?

" நாங்கள் காரில் போய்கொண்டிருந்தோம். குறுக்கே வந்த கார் திடீரென்று எங்களுடைய காருடன் மோதிவிட்டது. அவ்வளவு தான்! நான் எங்கேயோ இருட்டில் வேகமாக போவது போல் இருந்தது. பிறகு திடீரென்று ஒரு ஐந்தடி உயரத்தில் காற்றில் மிதப்பது போன்று இருந்தது. என்னுடைய காரை என்னால் பார்க்க முடிந்தது. காரைச் சுற்றி கூட்டம் கூடிவிட்டது.

என்னுடைய காரில் வந்த சிநேகிதன் அதிர்ச்சியுடன் காரின் இடிபாடுகளிலிருந்து வெளியே வருகிறான்.

என்னுடைய உடம்பு உள்ளே சிக்கிக்கொண்டிருக்கிறது. இவ்வளவையும் என்னால் தெளிவாகப் பார்க்க முடிந்தது." இப்படிச் சொல்கிறார் அவர்.

இன்னொரு பெண்ணுக்குத் திடீரென்று ஒருநாள் மாரடைப்பு வந்து அதிஷ்டவசமாக உயிர்பிழைத்தார்.

அவர் என்ன சொல்கிறார் தெரியுமா?

"என்னுடைய மூச்சும் இதயமும் நின்று விட்டது. தாதிமார் டாக்டரை அவசரமாக கூப்பிடுவது எனக்குக் கேட்டது. நான் என் உடம்பை விட்டு நழுவி வெளியே வந்து காற்றில்– வெறும் காகிதத்தைப் போல் மிதக்கிறேன். டாக்டரும் தாதிமார்களும் எனக்கு சுவாசம் வரவழைக்க முயற்சி செய்கிறார்கள். பெரிய இயந்திரம் ஒன்றைக் கொண்டுவந்து என் உடம்புக்கு மின் அதிர்ச்சி கொடுக்கிறார்கள். அதனால் என் உடம்பு அதிர்வதைக் கூடத் தெளிவாகப் பார்த்தேன்." என்றார் அந்தப் பெண்.

உடம்பை விட்டு வெளியே வருபவர்களின் அனுபவம் கிட்டத் தட்ட ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. அவர்கள் சொல்லும் வர்ணனை பல விதமாக இருந்தாலும் ஒரு விடயத்தை மட்டும் எல்லோரும் உறுதியாகச் சொல்கிறார்கள்.

என்ன தெரியுமா?

அதாவது உடம்பை விட்டு வெளியே வந்த பிறகு வலி இல்லை– வேதனையில்லை. சுகமான, வெதுவெதுப்பான நீரில் மிதப்பது மாதிரி இருக்கிறது என்கிறார்கள்.

'மரணத்தின் பின் மனிதர் நிலை' என்று மறை மலை அடிகள் ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார்.

பொதுவாக செத்துப் பிழைத்தவர்கள் எல்லோருமே ஒரு அதிசய விடயத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். அதாவது ஜோதி ரூபமாக அவர்கள் ஒரு பொருளைக் கண்டதாகவும் மிகவும் பிரகாசமாக இருந்ததாகவும் சொல்கிறார்கள். இருந்தாலும் கண் கூசவில்லையாம். அந்த வெளிச்சத்தைப் பற்றி வர்ணிக்க வார்த்தைகளே இல்லையாம்.

இதைத் தான் இராமலிங்க அடிகள் அருட்பெருஞ்சோதி என்று சொன்னார்.

இன்னொரு விடயம்...

அந்த 'வெளிச்சம்' அவர்களுடன் பேசியதாக கூட சொல்கிறார்கள்.

'வெளிச்சம்' எப்படி பேசும் என்று கேட்கிறீர்களா? வார்த்தையோ, குரலோ கேட்கவில்லையாம். ஆனாலும் அது சொல்வது புரிகிறதாம்.

இதுவரைக்கும் நான் சொன்னதெல்லாம் நானாக சொன்னதில்லை. விஞ்ஞானிகளும் மெஞ்ஞானிகளும் கூறிய கருத்துக்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு கட்டுரைப்போட்டி

(இருபாலை)

ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ்.பிரதேச செயலகத்தினால் கட்டுரைப்போட்டி நடத்தப்படவுள்ளது.

பாடசாலை மட்டத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில் க.பொ.த சா/த மற்றும் உயர்தர மாணவர்கள் பங்கு பற்றலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

கட்டுரைகளை "விழி இலார்க்கு வழிகாட்டும் வெள்ளைப் பிரம்பு" என்னும் தலைப்பின் கீழ் எழுதி எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் வெள்ளைப்பிரம்பு தினக் கட்டுரைப் போட்டி, பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறி விக்கப் பட்டுள்ளது. (ஸ்ரீ-4-136)

# கருத்தரங்கு

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் க.பொ.த சாதாரண மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை வினாத்தாள் தொடர்பான கருத்தரங்கில் தமிழ் மொழி பகுதி I, II இற்கான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை அறிவிக்கப்பட்ட இணைப்பு நிலையங்களில் நடைபெறவுள்ளது.

எனவே மாணவர்கள் ஆசிரியர்களினால் திருத்தி வழங்கப்பட்ட வினாவிடைத்தாள்களுடன் காலை 8 மணிக்கு சமூகமளிக் குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4-29)

# வகுப்பறை கட்டட கையளிப்பு நிகழ்வு

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நிர்மானித்த பாடசாலை வகுப்பறை கட்டட கையளிப்பு நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யா/மாதகல் சென்.தோமையார் றோ.க.பெண்கள் பாடசாலையில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன தலைவர் பேராசிரியர் ப.சிவநாதன் தலைமையில் நடைபெற்றவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் முருகேசு.சந்திரகுமார் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி. எழிலரசி அன்ரன் யோகநாயகம் மற்றும் கிறிஸ்தவ உதவி நிதிய நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் திருமதி தர்சினி மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் பாடசாலைக்கான முதலுதவிப் பெட்டியும் அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்படுவதுடன் கட்டடத் தொழிலாளர்களை கௌரவித்தல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-7)

# இராசி பலன்

*18.09.2010*
*(புரட்டாதி 2, சனிக்கிழமை)*
*தசமி காலை 6.07 மணி வரை*
*உத்தராடம் பின்னிரவு 12.30 மணிவரை*
*இராகுகாலம் 09.03-10.33 மணி வரை*
*சுபநேரம் 3.03-4.33 மணி வரை*
*முதலாம் புரட்டாதிச் சனி*

**மேடம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் ரீதியாக புதிய முதலீடுகள் மேற்கொள்ளலாம், கனவு பலிதம் உண்டு.

**இடபம்** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், இனத்தார் பகை மாறும், அலைச்சல் குறைந்து ஆதாயம் காண்பீர்கள்.

**மிதுனம்** வரவுக்கு மிஞ்சிய செலவுகள் காணப்படும், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலை ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** இனிமையான நாள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும், எடுத்த முயற்சி வெற்றி பெறும், விலகிய கூட்டாளிகள் மீண்டும் இணைவர்.

**கன்னி** உதிரி வருமானங்கள் பெருகும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சி வெற்றி தரும், அரசு வழிச்சலுகை கிட்டும், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரும்.

**துலாம்** வருமானம் வரும் வழியை கண்டு கொள்ளும் நாள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் ஏற்படும், வாகன யோகம் உண்டு.

**விருச்சிகம்** வெற்றிச் செய்தி வீடு வந்து சேரும், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், வருமானம் திருப்தி தரும், வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்ய நண்பர்களின் ஒத்துழைப்பு கிட்டும்.

**தனுசு** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உற்சாகமாக பணிபுரியும் நாள், சொத்துக்களால் பலன் கிடைக்கும், புதிய மாற்றங்கள் உண்டு, தடைப் பட்ட காரியம் கைகூடும்.


**மகரம்** ஆலய வழிபாட்டால் சிறப்பினைக் காணவேண்டிய நாள், நீண்ட நேரம் பணிபுரிய நேரிடலாம், கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும்.

**கும்பம்** பயணத்தால் பலன் கிடைக்கும், சொந்த பந்தங்களுக்காக சில செலவுகளை செய்ய முன்வருவீர்கள், சிறிய வேலை ஒன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம்.

**மீனம்** வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், நட்பு வட்டம் விரிவடையும்.

வளவன்

# பேசும் படம்



காட்சிகள் – அளவெட்டி




# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 80 |
| தக்காளி | 80 | 80 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 70 | 70 | 70 |
| கரட் | 60 | 60 | 80 |
| பூசணி | 40 | 35 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 45 | 70 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 40 | 60 |
| பாகற்காய் | 80 | 80 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 70 |
| பயற்றங்காய் | 60 | 50 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 130 |
| பீற்றூட் | 20 | 20 | 45 |
| கறிமிளகாய் | 60 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 90 |
| போஞ்சி | 120 | -- | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 70 |
| கீரை – 1 பிடி | 40 | 15 | 25 |
| தேசிக்காய் | 60 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-40 | 30 |

யாழ்ப்பாணம்- வண்ணை

# ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த் திருவிழா சிறப்பு மலர் - 2010.09.18


## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசியுரை



ஈழத்து திருப்பதி என போற்றப்படும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமானின் இரதோற்சவம் இன்று நிகழ்கின்றது. கொடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே என குலசேகராழ்வாரினால் போற்றித் துதிக்கப்படும் ஸ்ரீமத் நாராயணன் எமது துயரங்களை நீக்கவல்லவன். தன்னையே கதி என சரணடைந்தவர்களை அவன் ஒரு போதும் கைவிட்டதில்லை. தர்மம் அழிந்து அதர்மம் தழைக்கும் வேளையில் பகவான் அவதாரம் எடுத்து தர்மத்தை நிலை நாட்டுகின்றான். இத்தகு பெருமையான அருட்சிறப்புக்களை கொண்ட வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமான் தேரேறி எல்லோருக்கும் நல்லருள் பாலித்து காத்தருள வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம்.



## மஹோற்சவ பிரதம குருவின் அருளுரை



பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளாயினும் தத்துவவெழுத்தை மாற்றியமைக்க முடியாது என்று விதியின் வலிமையின் மிகுதிப்பாடு கூறப்படுகிறது. எனவே ஊழ் வினையினை வெல்ல முடியாதா? மனித முயற்சியெல்லாம் வீணாவதா என்ற வினா எழுகிறது. இதற்கான விடை வள்ளுவப் பெருந்தகை திருக்குறளில் "தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன் மெய் வருந்தக் கூலிதரும்" என்று கூறியிருக்கின்றார்.

யமன் கைப்பற்றிய சத்தியவானது உயிரை மீட்ட சாவித்திரியின் மனித முயற்சியும், பதினாறு வயதுக்கு மேல் வயதில்லை என்ற விதியை மாற்றி என்றும் பதினாறு வயது என்ற சிரஞ்சீவி வித்துவத்தை அடைந்த மார்க்கண்டேயரது மனித முயற்சியும் இதற்கு சான்று பகிர்கிறது.

பிறந்த ஒவ்வொருவரும் என்றோ ஒருநாள் இறப்பது நிச்சயம். அது எப்போது என்பதை எவரும் திடமாக அறிய முடியாது. எனவே நாம் மண்ணில் பிறந்துவிட்டோம் எமக்கு ஏற்படுகின்ற துன்பங்களிலிருந்து விடுபட எல்லாம் வல்ல காத்தற் கடவுளாகி வேங்கடேச வரதராஜப் பெருமாளை இன்றைய தேர்த்திருவிழாவில் வேண்டி அவர் அருளுக்கு பாத்திரமாவோமாக என பெருமானின் பாதக் கமலங்களை பணிந்து ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.

'சர்வேஜன சுகினோ பவந்து'

பிரம்மஸ்ரீ.இ.ரமணிதரக்குருக்கள்,
பிரதமகுரு,
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்.

## தேசம் விரும்பும் தீர்வு கொண்டு தேரிலேறி வருக!

பாண்டவர்க்கு தூது சென்ற பண்டுரங்கா தேரேறி வருக
பாஞ்சாலி துயர் தீர்த்த பரந்தாமனே தேரேறி வருக
நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்ற தேரேறி வருக
நினைத்ததை நிறைவேற்றும் வேங்கடேசா தேரேறி வருக
வேண்டும் தீர்வு விரும்பிடும் உரிமைதர தேரேறி வருக
வெற்றியைப் விடிவினைப் படைக்க தேரேறி வருக
ஆண்டிடு அழகிய இலங்கைத் தீவினில் அரங்கனே!
அன்பனே! வைகுந்த வாசனே தேரேறி வருக!

அ.மதுரகலா வித்தியா

## நாளை நமக்கொரு தீர்வு தந்தருள ஈழத்து திருப்பதியில் தேரேறி வருகிறான்



செந்தமிழும் சைவநெறியும் சால். புறத் தழைத்தோங்கும் ஈழவள நாட்டின் கண் வைஷ்ணவத்தலங்கள் பலவுள்ளன. இவற்றில் ஈழத்துத் திருப்பதி என அழைக்கப்படும் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானமும் ஒன்றாகும். இவ்வாலயம் யாழ்ப்பாணத் திருநகரிலே வண்ணையெம்பதியிலே அமைந்துள்ளது. இத்தலம் பண்டு தொட்டு நவக்கிரக வழிபாட்டுக்கு பிரசித்தி பெற்று விளங்குகிறது.

பிரதான வாயிலிலே ஏழு மாடங்களைக் கொண்ட நீண்டுயர்ந்த இராஜகோபுரமும் இதன் இரு புறத்தேயும் மணிக்கோபுரங்களும் அமைந்து காணப் படுகின்றன. இந்த அழகிய உயர்ந்த இராஜகோபுரத்தில் இடம்பெறும் கதைவிக்கிரகங்கள் திருமாலின் தச அவதாரத்தையும் ஸ்ரீ இராமாயண, ஸ்ரீமத் பாகவத புராணங்களின் சில பகுதிகளையும் நினைவூட்டுகின்றன.

கர்ப்பக் கிரகத்தில் ஸ்ரீ வேங்கடேஸ்வர மூர்த்தி எழுந்தருளியுள்ளார். வேண்டுவார் வேண்டும் வரமனைத்தையும் தருகின்ற நாராயண பெருமான் வீற்றிருக்கின்றார்.

நாராயணன் என்ற பெயர் எவ்வாறு உதித்தது என்று சிந்திக்கின்ற பொழுது 'நரா' என்றால் புருசனிடத்திலிருந்து தோன்றி பூதங்கள் முதலிய பிரபஞ்சப்பொருட்கள் 'அயனன்' என்றால் அமர்ந்திருப்பான் எனப் பொருள்படும். நாரா+ அயனன் நாராயணன் என்றானது.

திருமால் சதுர்புஜம் அல்லது நான்கு திருக்கரங்களை உடையவனாயிருக்கின்றான். மனிதனது ஆற்றலுக்கு அறிகுறி இரண்டு கைகள். அவைகளில் ஒருகை இல்லாவிட்டாலும் அவன் பல காரியங்களுக்கு உதவமுடியாதவனாகின்றான். இருகைகளையுடையவன் எதையும் செய்யவல்லவனாகிறான். ஆயினும் மானிட ஆற்றல் அளவைக்கு உட்பட்டது. தெய்வத்தின் ஆற்றல் அளப்பரியது என்பதை நான்கு கைகள் விளக்குகின்றன.

பெருமான் ஒரு கையிலே சங்கை ஏந்தியிருக் கின்றார். அச்சங்கானது ஊதுமிடத்து உண்டாகும் ஒலி ஓங்காரம் 'ஓம்' என்னும் ஓசைக்கு நாதப்பிரம்மம் என்று பெயர். இது ஒரு மொழியிலும் ஒரு சமயத்திலும் கட்டுப்படாதது. இயற்கை முழுவதும் இயங்குவதால் உண்டாகும் சப்தமே ஓங்காரம். அது பிரணவம் என்று பகரப்படும். தன் கையில் சங்கை வைத்திருப் பவன் மூலம் தான் பிரணவப் பொருள் என்பதை அரங்க நாதன் அறிவுறுத்துகிறான்.

அரங்கநாதன் அரங்கத்தில் சயனித்திருக்கின்றான். என்றாலும் அவன் ஒருநாளும் அரங்கத்தைச் சார்ந்திருப்பவனல்ல. அரங்கம் அவனைச்சார்ந்திருக்கிறது. பார்வைக்கு கண்வளர்ப்பவன் போன்று காணப்படுகிறான்.

உண்மையில் பேரறிவே வடிவெடுத்தவனாயிருக்கின்றான். பரிபூரணப் பொருளாகிய அவனுடைய சந்நிதியிலே உலகம் யாவும் தோன்றுதலும் நிலை பெறுதலும் நீங்குதலும் முடிவில்லாத விளையாட்டாக திகழ்ந்து கொண்டிருக்கின்றான்.

காயத்தை அவனுக்கு உகந்த பெரிய கோயிலாக்கி அவனுக்கே பணிவிடை செய்து அவனுக்கென்று வாழ்ந்திருந்தால் நமது மனம் பாற்கடல் போன்று பொலிவு பெறும். இத்தகு பெருமைகளைக் கொண்ட நாராயணன் யாழ் வண்ணையம் பதியிலே எழுந்தருளி அருள்பாலிக்கின்றான். பெருமானைச் சூழ ஆழ்வார்களுடைய திருக்கோவில், ஸ்ரீமகாலட்சுமி, நந்தகோபாலர், ஸ்ரீராமர், ஆண்டாள், ஆஞ்சனேயர், நவக்கிரக பீடம் ஆகிய பரிவார மூர்த்திகளும் அழகிய திருக்கோயில்களிலிருந்து அருள் பாலிக்கின்றனர்.

இத்தகு பேரருட்திறனையுடைய வேங்கடவன் இன்று (18.09.2010) முதலாவது புரட்டாதிச் சனி வாரத்திலே தேரேறி அருள் பாலிக்கின்றார்.

கவிமாமணி, மகாகவிசாகரம், செஞ்சொல் ஞான வாரிதி,
வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தன்,
அகில இலங்கை சமாதான நீதவான்,
வானொலி, தொலைக்காட்சி நேர்முக வர்ணனையாளர்,
ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி.

## தேவஸ்தான மகாசபையினரின் பிரார்த்தனையுரை

வண்ணைத் திருநகரிலே ஈழத்து திருப்பதி என எல்லோராலும் போற்றி வழிபடப்படும் திருத்தலமானது இற்றைக்கு பன்நெடுங் காலங்களுக்கு முன்பு மார்க்கண்டேய ஹோத்திரத்தைச் சேர்ந்த பத்மசாலி வைத்தியாரால் ஸ்தாபிக்கப்பட்ட பெரும் சிறப்பைக் கொண்டு விளங்குகின்றது. இன்றும் அவர் வழிவந்தோராலேயே பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாலயத்திலே நடைபெறும் விழாக்கள் யாவும் பாஞ்சராத்திர ஆகம முறைப்படி நடைபெறுகின்றது. "சர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்பது வைஷ்ணவ சமயத்தவர்களின் கோட்பாடாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டிலே ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம், வடமராட்சியிலே வல்லிபுர மாயவரது ஆலயமும், பொன்னாலையில் வரதராஜப் பெருமாள் ஆலயமும் சிறப்பு மிக்க விஷ்ணு தலங்களாகக் கருதப்படுகின்றன.

இத்தகு பெருமைகளோடு வண்ணை வேங்கடேசப் பெருமானின் திவ்விய திருவருட்கடாட்சம் பெருகி வருகினறது. இன்றைய தினம் தேரேறி அருள்பாலிக்கும் நாராயண சுவாமியின் திருவருள் கிடைக்க பிரார்த்திப்போமாக.

தேவஸ்தான மகாசபையினர்
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள்தேவஸ்தானம்

மலரமைப்பு:- மதுரகவி

பசு மாடு மேய்த்திடும் பரந்தாமா பக்தர்களைக் காத்தருள தேரேறு!
இலங்கை தீவினுள் ஒன்றிணைந்து பசு வதையை நிறுத்துவோம்!
வேணி களஞ்சியம்
இல.165, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
TP.No - 021 222 2046

ஆதிஷேடன் மீது அனந்த சயனம் கொள்ளும் மேதினி நாயகனே தேரேறி வருக!
மக்களின் மகத்தான சேவையில்......
றூபா பன்முக வர்த்தகம்
நிறுவன முதல்வர்கள்:-
திரு.க.செல்வரத்தினம், திரு.க.ராஜகுமாரன்
இல:104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
TP.No - 021 222 8330

"குழலிசை பொழிந்திடும் கோவர்த்தனதாரி கழலடி துணை யெமக் கருள தேரேறி வருக"
யாழ் கலணியகம்
T.P-021 222 3152
Yarl trades center agents for Bata, 11.modern market, Hospital Road, Jaffna.

"மகர குண்டலங்களும் மகரதப் பொன்முடியும் புகவரும் புகழ்மிகும் புரிசங்க சக்கரமும் ஏந்திவருக"
சிவா ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
இல.58, மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

"பாமலரால் உன்னை பாடி புகழ்ந்திட மாதவ ஸ்ரீதரா யாதவனே அருள் செய்க"
கனகா பத்திரிகை விற்பனையகம்
இல.6, பலாலி வீதி, திருநெல்வேலி.

மந்தாரை மலர்மலி வண்ணைப் பதியினிலே செந்தாமரைச் செல்வி சேரும் வரதனே தேரேறு!
அம்பாள் மரக்காலை
Ambal timber depo
No.261, point pedro Road,
Nallur - Regno,NAL/58

வண்ணை வளரும் வேங்கடேசா - அருள் வெண்ணை திருடி உண்ட கண்ணனே தேரேறு!
நவநாகரீக தெரிவுகளுக்கு
அன்றும், இன்றும்! ஏன் ! என்றுமே
சரவணா புடவையகம்
SARAVANA TEXS
T.P :- 021 222 1723
இல.526,529, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
No.526,529.point Pedro Road, Nallur.



DHL WORLDWIDE EXPRESS
திருமுருகன் கொம் நெற்
உலக நாடுகளுக்கு ஆகாய கடல் வழி மார்க்க பொதிகள் சேவை
உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிற்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)
DHL விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை DHL
நாட வேண்டிய முகவரி
259 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்
லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
TCN EXPRESS
28, Nelsan Place, Colombo -06
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
பிரதான வீதி, நெல்லியடி
5, திருநகர் வீதி, கிளிநொச்சி
44, மில் றோட், வவுனியா
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம் பெறும்

# மணற்காடு முகாமிலிருந்த மக்களில் ஒரு பகுதியினர் இன்று மீள்குடியேற்றம்

(பொலிகண்டி)

மணற்காடு முகாமிலிருந்து ஒரு பகுதி மக்கள் தமது சொந்த இடங்களுக்கு இன்று காலை 8 மணியளவில் மீள் குடியேற்றப் படவுள்ளனர்.

இதில் குறிப்பாக ஆழியவளை, உடுத் துறை, மருதங்கேணி, வத்திராயன், தாழையடி, செம்பியன் பற்று மற்றும் மாமுனை போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு மீள்குடியேற்றப்படவுள்ளனர்.

இவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் அனைத்தையும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஏற்பாடு செய்துள் ளது. (ஸ்ரீ-7-43-48)

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள்

## ஜனாதிபதிக்கு கடிதம்

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான ஓய் வூதியத் திட்டத்தை துரிதப்படுத்துமாறு கோரி, நாடெங்கிலுமுள்ள சமுர்த்தி உத்தியோகத் தர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷக்கும் நேற்று முன்தினம் தந்தி களை அனுப்பியுள்ளனர்.

சுமார் 24,500 பேர் தந்திகளை அனுப் பியதாக சமுர்த்தி தொழிற்சங்க ஒன்றிய கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் சுனில் சுபசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டு வருவதற்கு தியாகங்களைச் செய்துள்ள நிலையில் அவர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை துரிதப்படுத்துமாறு மேற்படி தந்தி களில் கோரப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# பதில் பாதுகாப்பு அமைச்சராக பிரதமர்

(கொழும்பு)

பதில் பாதுகாப்பு அமைச்சராக பிரதமர் டி.எம்.ஜயரட்ன ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார் என பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் 65ஆவது அமர்வில் கலந்துகொள்ளும் பொருட்டு ஜனாதிபதி அமெரிக்கா சென்றுள்ளதை யடுத்து இந்தப் பதில் நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

அதன்படி ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ நாடு திரும்பும்வரை அரச பாதுகாப்பு அமைச்சின் பதில் அமைச்சராக பிரதமர் செயற்படுவார் என்றுபிரதமர் அலுவலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ)

Win மெகா
கம்பியூட்டர் ஸ்கொலர்ஸிப்
... இலவச பரீட்சை ...
19-09-2010
உங்கள் அறிவுத்திறனை நிரூபித்து
80%
ஸ்கொலர்ஸிப் வெல்லுங்கள்



COMPUTER புலமைப் பரிசில்
- பரீட்சை அனுமதி இலவசம்.
- தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம்.
- 50 பல்தேர்வு வினாக்களை கொண்டது
- பொதுஅறிவு மற்றும் பொதுஉளச்சார்பினை உள்ளடக்கியது.

இலவச அனுமதிகளை அருகில் உள்ள எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ள இன்றே விரையுங்கள்...

TECHNO WORLD Studies (Pvt) Ltd
கணினிப் பயிற்சி நிறுவனம்

344, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ☎4921124
மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகில் யாழ் வீதி, மானிப்பாய். ☎4922400
64, பலாலி வீதி, திருநெல்வேலி. ☎4922401
கென்ஸ்மன் வீதி, நீதிமன்றம் எதிரில், சாவகச்சேரி. ☎5102600
246/25, மாலி சந்தி, கரவெட்டி-நெல்லியடி
ஐயாகடை சந்தி, மீசாலை

கணினி உலகில் என்றும் உங்கள் நண்பன்
(C-1199)

இந்த அரிய வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்!

2009 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் பாரிய வெற்றியின் பெருமிதத்துடன் Pico Events வழங்குகிறது.

Organized by pico Events

அனுமதி இலவசம்

செப்டம்பர் 18–19ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரியில்



யாழ் கல்விக் கண்காட்சியானது அதிகரித்து வரும் கல்வி, உயர்கல்வித் தேவைகளை வடமாகாணத்தில் நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னோடி கண்காட்சியாகும். முதலாவது கண்காட்சியின் வெற்றியின் அடிப்படையில், யாழ்ப்பாணத்து மாணவர் சமூகத்தினை நேரடியாக ஒரேயிடத்தில் பார்ப்பதற்கு விரும்பும் எவருக்கேனும் இதுவே பொருத்தமான இடமாகும். முதலாண்டு கண்காட்சியைப் போன்றே இந்நிகழ்வும் உலகின் பலபாகங்களிலுமுள்ள முன்னணி கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இருக்கும்.



JEF
Jaffna Education Fair 2010

காட்சிப்படுத்தப்படும் அனைத்துப்பிரிவுகள்

கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், வணிகக்கல்லூரிகள், மற்றும் பொறியியல் மருத்துவ, மருந்தாக்க, சுகாதார, விமானசேவை, தகவல் தொழில்நுட்பம், பல்லூடகம், இணைய வடிவமைப்பு, முகாமைத்துவம், வர்த்தகம் என்பவற்றிற்கான பயிற்சி நிறுவனங்கள்.


நிர்வாகம், மனிதவள அபிவிருத்தி, விற்பனையும் சந்தைப்படுத்தலும், வங்கியியல், சட்டம், கணக்கீடு, புதுத்தோற்ற வடிவமைப்பு.

ஆடைதயாரிப்பு, அழகுக்கலையும் ஆட்கள் அலங்கரிப்பு, கட்டடக்கலையும், நில அளவீடும், ஹோட்டல்துறை மற்றும் உணவு வழங்கல், மொழிகள், இசைநடனம், மயக்கமுட்டற் கற்கைகள், தொழிற் பயிற்சி மற்றும் ஆதாரசேவைகள் (நூல்கள், வெளியீடுகள், கல்விசார் துணைக்கருவிகள், கணினி, காகிதாதிகள்)

BRITISH COUNCIL — Main Sponsor
Co-Sponsors
Daily News — Print Media Sponsor
உதயன் — Official Tamil Newspaper
Official Electronic Media Sponsor
pico — Official stall contractor
Ministry of Education & Ministry of Higher Education
Northern Provincial Council
Governor's Sub Office, Northern Province

18th September Ad
Half Page (B/W)

# சாட்டியில் கோயில் கொண்டு அற்புதங்கள் பல பொழியும் சிந்தாத்திரை மாதா



கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் தனியிடம் வகிப்பவள் புனித கன்னிமரியாள். கோடிக்கணக்கான கத்தோலிக்க மக்களின் இதயங்களில் நீங்காத நினைவாக நிறைந் திருப்பவள் அன்னை. இதனால் தான் அனைத்து மக்களும் இன,மத பேத மின்றி அன்னை யின் திருத்தலங்களைத் தரிசித்து பிள் ளைகளுக்குரிய உரிமையோடு தங்கள் சுக துக்கங்களை அன்னையோடு பகிர்ந்து அன்னையின் ஆசீர் பெற்றுச் செல்கிறார் கள். இவ்வாறு புகழ் பெற்ற திருத்தலங்களில் ஒன்றாக, எமது யாழ்.மறை மாவட்டத்திலே கடலலை தாலாட் டும் இயற்கை எழில் மிக்க சாட்டியிலே கோயில் கொண்டிருக்கும் சிந் தாத்திரை அன்னையின் திருத்தலமும் விளங் குகிறது. இன்று யாழ்.கத்தோலிக்க திருச்சபை அன்னையின் திருவிழாவைக் கொண்டாடு கின்ற வேளையில், அத்திருத்தலத்தின் சிறப் பினையும், அன்னையின் மகிமை யினை யும் நாம் அறிந்து கொள்வது சாலச் சிறந்தது.

இந்து சமுத்தி ரத்தின் நித்திலம் என அழைக்கப்ப டும் இலங்கையில், யாழ்ப்பாணக் குடா நாட்டின் தீவகப் பகு தியிலே வேலணை என்னும் பகுதியில் அமைந்துள்ள சிற் றூரே சாட்டியாகும். நீலக்கடலும் அது கழுவிய தூய மண லும் அவை வலுக் கொடுக்க ஓங்கி வளர் ந்திருக்கும் பனைகளும் எழில் பரப்ப, அழ காகக் காட்சி தருகின்ற இக் கிராம மா னது ஒரு காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக் குமான வர்த்தக மையமாக விளங்கியதை வரலாற்றில் காண முடிகின்றது.

1544 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அக் கடற்ப்ரப்பிலே பயணித்த போர்த்துக்கேய ரின் கப்பலொன்று கடும் புயலில் அகப்பட்டு அதில் பயணித்த அனைவரும் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த வேளையில், கப்பல் தலைவன் அன்னையிடம் உருக்குமாக மன்றாடினான்.

அன்னையின் பரிந்துரை யால் காப்பாற் றப்பட்ட அவர்களது கப்பல் சாட்டி கடற்க ரையிலே அற்புத விதமாக கரை யொதுங் கியது. அன்னையின் புதுமையைக் கண்டு ஆனந்தமடைந்த கப்பல் தலைவன் அப்பகு தியிலே ஒரு கொட்டகை வடிவில் ஆலயம் அமைத்து அன்னையின் திருச் சுரூபத்தை வைத்து வழிபட்டான். பின்னர் அது பிரசித்தி பெற்ற ஓர் வழிபாட்டுத் தலமாக மாறியது.

போர்த்துக்கேயருக்கு பின்னர் வந்த ஒல் லாந்தர் அன்னையின் திருத்தலத்தை முற்று முழுதாக அழித்தார்கள். ஆனால் சிறிது காலத்திற்கு பின்னர் மக்கள் மேற்கொண்ட தேடுதலின் விளைவாக அன்னையின் புதுமை மிக்க திருச்சுரூபம் ஒரு கிணற்றுக் குள் இருந்து கண்டெடுக்கப்பட்டது. பின்னர் அவர்கள் அன்னையின் திருத்தலத்தை மீள அமைத்தார்கள்.

அன்று தொடக்கம் பிரசித்தி பெற்ற ஒரு திருத்தலமாக அன்னையின் பிரசன்னம் அங்கிருப்பது யாவரும் அறிந்த உண் மையே.

காத்திருக்கும் அன்னையின் திருவிழா இன் றைய தினம் யாழ்.மறை மாவட்டஆயர் அதி வந்தனைக்குரிய தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையின் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொண்டாடப்படவுள் ளது. யாத்திரிகர்களின் அவசிய தேவை களை கவனிப்பதற்கு இலங்கைக் கிறிஸ்தவ விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சு முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிந்தாத்திரை மாதா என அழைக்கப்படும் எமது அன்னை ஒருகரத்தில் தனது குழந்தை இயேசுவை தாங்கியவளாகவும், மற்றைய கரத்தில் கப்பலை ஏந்தியவளாகவும் துன்பங் களோடும், வேதனைகளோடும் வரும் தனது பிள்ளைகளை தேத்தி அரவணைக்கும் சாந்தமும் புனிதமும் நிறைந்தவளாக அன் னை தனது கொலுவிலே வீற்றிருக்கிறாள். குறிப்பாக படகோட்டிகளின் பாதுகாவியாக விளங்கும் சிந்தாத்திரை அன்னையின் பதி நாடிவரும் பக்தர்களின் எண்ணிக்கை தற் காலத்தில் மிகவும் அதிகரித்திருப்பது அவ தானிக்க முடிகிறது.

## இன்று சாட்டி தூய சிந்தாத்திரை அன்னையின் பெருவிழா

அன்னையின் அற்புதப் புதுமைகளால் நலம்பெற, பல்லாயிரக்கணக்கான மக்கள் பல பாகங்களில் இருந்தும் வந்து அன்னை க்கு வணக்கம் செலுத்துவதோடு, இறைவ னுக்கு புகழ் பாடுகிறார்கள்.

அன்னையின் பரிந்துரையால் நோய் கள், வறுமை, போர் அபாயங்களிலிருந்து விடுதலை பெற்று தங் கள் வாழ்வை இயேசு ஆண்டவரின் வழியில் முன்னெடுக்கிறார் கள். பல்லாயிரக்கணக்கான மக்களின் தரிசிப்பால் அன்னையின் திருத்தலம் இன்று தனக்கென ஒரு பொலிவைப் பெற்று அழ கோடு சிறந்து விளங்குகின்றது.

இறைமக்கள் அனைவரும் ஆவலோடு

**அருட் சகோ.றமேஸ் அ.ம.தி**

இதனைக் கருத்திற் கொண்டு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஸ்ரான் பிலிப் அ.ம.தி. அடிகளார், யாத்திரிகர்களுக்கான அனைத்து வசதிகளையும் ஒழுங்குபடுத்தி யுள்ளார்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
கலைப்பீடம்

**விசேட மீள் பரீட்சைகள்**

கலைமாணி மற்றும் நுண்கலைமாணி பட்டப்படிப்பை பயின்று இரண்டாம் மொழி ஆங்கில பாடத்தில் சித்திபெறத் தவறியதால் தமது பட்டப்படிப்பை பூர்த்தி செய்யாதுள்ள மாணவர்களுக்கு இரண்டாம் மொழி ஆங்கில பாடத்துக்கான பரீட்சைகள் எதிர்வரும் 23.09.2010 திகதியன்று நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பின்வரும் பாட அலகுகளில் சித்தியடையத் தவறிய மாணவர்கள் உடனடியாகத் தத்தமது பெயர், பதிவிலக்கம், சுட்டெண், பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய வருடம் மற்றும் அரையாண்டு ஆகிய விபரங்களை 021 2223091 எனும் தொலைபேசிக்கோ அல்லது அதே இலக்க தொலைநகலுக்கோ அல்லது deanarts@sltnet.lk எனும் மின்னஞ்சலுக்கோ அல்லது நேரில் தொடர்புகொண்டோ தெரிவிக்கவும்.

பரீட்சை நடாத்தப்படவுள்ள பாட அலகுகள் பின்வருமாறு,

AEGA11010, AEGA12010, AEGA21010, AEGA22010, AEGA31010, AEGA32010 .

**பதிவாளர்**
**17.09.2010**

(C-1201)


# அரசாங்கத்தின் அழைப்பை நிராகரித்தார் ஜோன் அமரதுங்க




ஐக்கிய நாடு கள் பொதுச்சபைக் கூட்டத்தில் இணை ந்து கொள்ளு மாறு விடுக்கப் பட்டஅழைப்பினை ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்ஜோன் அமரதுங்க நிராக ரித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலை மையில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து குழாமில் ஜோன் அமர துங்கவின் பெயரும் பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும் கட்சியினால் பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களினால் தாம் இந்த அழைப்பை நிராகரித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் பிரதிநிதிகள் குழுவில் தாம் அங்கம் வகிப்பதனை சில ஐக்கிய தேசி யக் கட்சி உறுப்பினர்கள் விரும்பவில்லை எனவும் இந்தக் குழுவில் இணைந்து கொள்ள வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரியதாகவும் தெரி வித்ததோடு தனிப்பட்ட காரணங்களுக்காக தாம் அமெரிக்காவிற்கு விஜயம் செய்யவுள் ளதாக அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட் டத்தில் கலந்து கொள்ளும் அரசாங்கப் பிரதி நிதிகள் குழுவில் அங்கம் வகிக்குமாறு விடுக் கப்பட்ட அழைப்பினை தாம் முன்னர் ஏற்றுக் கொண்டதாகவும் கட்சியினால் பிரயோகிக்கப் பட்ட அழுத்தம் காரணமாக தாம் அந்தத் தீர் மானத்தை வாபஸ் பெற்றுக் கொண்டதாக வும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கக் குழுவில் அங்கம் வகிப் பதனை தாம் தவறாகக் கருதவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)





யாழ். கல்வி வலயப் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கான பாடசாலை ஆளணிச் சீராக்க செயலமர்வு நேற்று முன்தினம் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெற்றது. இதில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரநாதன் செயலமர்வு நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட அதிபர், ஆசிரியர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்.)

# அழகுக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக் களத்தினால் கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவில் 3 மாத கால முக அலங்காரம், சிகை அலங்காரம், கேக் ஐசிங் ஆகிய பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

இதில் குறித்த பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட 18 முதல் 35 வயதிற்குட்பட்டவர்கள் பங்குபற்ற முடியும் எனவும் பயிற்சியை பெற விரும்புவோர் பிரதேச செயலக கிராம அபிவி ருத்தித் திணைக்களத்துடன் தொடர்பு கொள் ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்



## சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம்)

**மனோ பலத்தால் மற்றவர்கள் செய்ய முடியாத காரியத்தை செய்து காட்டும் சிங்கராசி நேயர்களே!**

சொன்னவுடன் அதை செயல்படுத்த வேண்டுமென்று விரும்புபவர்கள் நீங்கள். பணம் என்பது பயன்படுத்த வேண்டுமே தவிர பாதுகாத்து வைத்துக்கொள்ள வேண்டுமென்பதில்லை என்ற குணத்தைப் பெற்ற நீங்கள், பணத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்கள். உற்றார், உறவினர்களைக் காட்டிலும் நண்பர்களிடம் காட்டும் பாசமே உங்களுக்கு முக்கியத்துவமாக இருக்கும்.

புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஏழரைச் சனியில் பாதச்சனி ஒரு புறம் நடைபெற, அஷ்டமத்தில் குரு வக்ரமடைய, சூரிய, சனி சேர்க்கை ஏற்படுவது அவ்வளவு நல்லதல்ல என்றாலும், தனலாபாதிபதியான புதன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பதால் பணப் புழக்கத்திற்கு குறைவிருக்காது. நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் தடைகளை மீறி செய்து முடிப்பீர்கள். வழிபாடு உங்கள் வளர்ச்சியைக் கூட்டும்.

வக்ர குரு பெயர்ச்சியாகும் வரை கொஞ்சம் பொறுமையை கடைப்பிடிப்பது நல்லது. வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியடைய குரு தட்சிணாமூர்த்தியை வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் வழிபட்டு வருவதோடு, ஏழரைச்சனியின் ஆதிக்கத்தால் ஏற்படக் கூடிய அல்லல்கள் அகல சனிக்கிழமை தோறும் சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றி வழிபட்டு வருவதும் நல்லது.

பொதுவாக அஷ்டமாதிபதி வலுப்பெறும் பொழுது, வாகன மாற்றம், இடமாற்றம், வீடு மாற்றங்களைச் செய்து கொள்ளவேண்டும். அப்பொழுது தான் வாழ்க்கைப் பயணத்தில் தடைகள் ஏற்படாது. பஞ்சம இராகு, சந்திரனோடு இணைந்திருப்பதால், சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்து கொண்டால், சந்தித்தவர்களால் பிரச்சினைகள் ஏற்படாது. இரண்டாவது சுற்றும் ஏழரைச் சனி நடப்பவர்கள் ஓரளவு நற்பலன்களைக் காண்பர்.

### பொன்னான புதனின் பெயர்ச்சி

எதிர்வரும் 26 ஆம் திகதி தனாதிபதி புதன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக, பொருளாதார விருத்தி அதிகரிக்கும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து காரியங்களை முடித்துக்கொடுப்பர். வங்கிகளில் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். புதிய தொழில் தொடங்க வேண்டுமென்ற திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். கூட்டுத்தொழிலில் இருந்த பிரச்சினைகள் அகலும். பூர்வீக சொத்துக்களால் இலாபம் கிடைக்கும். அதைக் கொண்டு புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### புத – சுக்ர யோகம்

புதனும், சுக்ரனும் இணைந்து ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி முதல் ஆச்சரியப் படத்தக்க பலன்களை உங்களுககு வழங்கப்போகிறது. குறிப்பாக 2, 11-க்கு அதிபதியும், 3, 10-க்கு அதிபதியும் ஒன்றாக இணையும் பொழுது அதோடு 4, 9-க்கு அதிபதியும் சேர்ந்திருப்பதால் ஒக்டோபர் 13ஆம் திகதி முதல் நீங்கள் அதிர்ஷ்ட தேவதையின் அருளுக்குப் பாத்திரமாகப் போகிறீர்கள். வெளி வட்டார பழக்கவழக்கம் விரிவடையும். வீடு, குடும்பம், தாய், தந்தை, சகோதரர்கள் என்பதில் இதுவரை இல்லாத பிடிப்பு இப்பொழுது ஏற்படும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

மாதம் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்க நந்தீஸ்வரரையும், நவக்கிரகத்தையும் வழிபட்டு வருவதோடு, யோக பலம் பெற்ற நாளில் சிவபெருமானையும் வழிபட்டு வாருங்கள்.

### பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

இம்மாதம் குடும்ப உறுப்பினர்களை திருப்திப்படுத்தும் மாதமாகும். செலவுகள் கூடினாலும் கவலைப்பட வேண்டாம். தேவைக்கேற்ப பணம் வந்து கொண்டேயிருக்கும்.

தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும். பாகப்பிரிவினைகளால் பணம் வந்து சேரும். கணவன் - மனைவிக்குள் உறவில் திருப்தி ஏற்பட வேண்டுமானால் உள்ளத்தைப் புரிந்து கொண்டு நடக்க வேண்டும். விஷ்ணு வழிபாடு வேதனை தீர்க்கும்.



## கன்னி

(உத்தரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)

**மற்றவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கி, மனதில் இடம் பிடிக்கும் கன்னி ராசி நேயர்களே!**

எதற்கும் ஒரு எல்லை உண்டு என்பதை அறிந்த நீங்கள், எல்லையைத் தாண்டி நடப்பவர்களிடம் பின் விளைவைப் பற்றி சிந்திக்காமல் கோபம் கொள்வீர்கள்.

எதையும் உற்று நோக்கும் ஆற்றல் உங்களுக்கு அதிகம் உண்டு. உடன்பிறப்புகளிடம் அதிகம் பாசம் காட்டுபவர்களின் பட்டியலில் நீங்கள் முதலிடம் பிடிப்பீர்கள். "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்ற பழமொழி உங்களுக்கே பொருந்தும்.

புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாத தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். விரயாதிபதியோ உங்கள் இராசியில் சஞ்சரிக்கிறார். எனவே, அளவுக்கு அதிகமான விரயங்களைச் சந்திக்க கூடிய மாதமாக இம்மாதம் அமையலாம். குறிப்பாக, இராசிநாதன் பலம் பெற்றிருந்தால் தான் எடுத்த காரியங்களை எளிதில் முடிக்க இயலும். இல்லையென்றால், குறுக்கீடுகள் அதிகரிக்கும். அந்த நேரத்தில் தான் நீங்கள் வழிபாடுகளை மேற்கொள்ள வேண் டும்.

வக்ர குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவது ஒரு வழிக்கு நன்மைதான். என்றாலும், இராசியிலேயே சூரிய – சனி சேர்க்கை ஏற்படுவது அவ்வளவு நல்லதல்ல. பெற்றோர் வழியில் பிரச்சினைகள் ஏற்படலாம். எனவே, சூரியனும், சனியும் அருகருகே இருக்கும் ஆலயங்களில் புராதன கோவில்களைத் தேர்ந்தெடுத்து, யோக பலம் பெற்ற நாளில் வழிபாடு செய்து வந்தால் கருத்து வேறுபாடுகள் அகலும். கவலைகளில் பாதி குறையும்.

மாத தொடக்கத்தில் இலாபாதிபதியோடு இராகு இணைந்திருப்பதால், அது இராகுவின் ஆதிக்கம் என்பதால் ஏற்ற இறக்கமான சூழ்நிலையே மாதம் முழுவதும் தென்படும்.

### பொன்னான புதனின் பெயர்ச்சி!

செப்டம்பர் 26ஆம் திகதி இராசிநாதன் புதன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். இது நன்மைதான். உடல் ஆரோக்கியம் சீராகும். உங்களை தேடி வந்த பகை விலகும். உற்சாகம் உள்ளத்தில் குடி கொள்ள அச்சாரம் கொடுத்த வேலை அனைத்தையும் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் விரும்பிய இடத்திற்கு பணி மாற்றம் கிடைக்கும். கூட்டாளிகள் உங்களை விட்டு விலகினாலும், புதிய கூட்டாளிகள் வந்திணைவர்.

### புத – சுக்ர யோகம்!

புதனும், சுக்ரனும் இணைந்து ஒக்டோபர் 13ஆம் திகதி துலாம் இராசியில் சஞ்சரிக்கிறார்கள். புத – சுக்ர யோகம் எனப்படும் யோகம் செயற்பட்டாலும் அதை அஷ்டமாதிபதி செவ்வாய் உடன் இருந்து முழுமையாகச் செயற்படுத்த விடாது. எனவே, சில பணிகள் பாதியிலேயே நிற்கலாம். இக் காலத்தில் அங்காரக வழிபாட்டையும், அம்பிகை வழிபாட்டையும் முறையாக மேற்கொண்டால் தங்குதடைகள் அகலும். தனவிரயமும் ஓரளவு குறையும்.

மாதம் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்க ஏழரைச் சனிக்கு பரிகாரமாக சனீஸ்வரரை வழிபட்டு வருவது நல்லது. சுக ஸ்தானத்தில் இராகு இருப்பதாலும், செயல் ஸ்தானத்தில் கேது இருப்பதாலும் சர்ப்ப கிரக வழிபாட்டையும் முறையாகச் செய்வது நல்லது.

## சிவல்புரி சிங்காரம்

### பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

இம்மாதம் விலை உயர்ந்த பொருட்களை கையாளுவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். குடும்பத்தில் செலவுகள் கூடு கின்றதே என்று கவலைப்படுவீர்கள். மூன்றாம் நபரின் தலையீட்டால் கணவன் - மனைவிக்குள் பிரச்சினைகள் உருவாகலாம். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. உங்கள் பெயரிலேயே வீடு கட்டும் பணி அல்லது வாங்கும் பணி நிறைவேறும். தெசாபுத்திக்கு ஏற்ப தெய்வ வழிபாடு திருப்தி தரும். (தொடரும்)

# தற்போதைக்கு அரசியலில் ஈடுபடும் எண்ணமில்லை

## தயா மாஸ்ரர் தெரிவிப்பு



(கொழும்பு) தற்போதைக்கு அரசியலில் ஈடுபடும் திட்டம் கிடை யாது என தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடனோ அல்லது புலனாய்வுப் பிரிவினருடனோ இணைந்து செயற்படுவதாக வெளியாகும் தகவல்களில் எவ்வித உண்மையும் கிடையாதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனை தாம் ஒரு போதும் சந்திக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் காரணமாக இன்னல்களை எதிர் நோக்கி வரும் அப்பாவி வன்னி மக்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் முடிந்தளவு உதவிகளை வழங்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மீள்குடியேற்றப்பட்ட சில கிராமங்களில் போதியளவு வசதிகள் கிடையாது எனவும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இவ்வாறான பிரதேசங்களுக்கு புலம் பெயர் தமிழ் மக்கள் கூடுதல் ஆதரவினை வழங்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


(ஸ்ரீ)

# பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2010/ 2011 ஆம் கல்வியாண்டுக்கான பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கை நெறிக்கு புதிதாக பதிவு செய்த மாணவர்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமாரன், சிறப்பு விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3)





DFCC வர்த்தன வங்கியின் நடமாடும் வங்கிச் சேவையை யாழ்.போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ரவிராஜ், வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர் அருணிடம் ஆரம்ப வைப்பினையிட்டு ஆரம்பித்து வைப்பதையும், அருகில் வங்கி முகாமையாளர் ஞானோதரன் நிற்பதை முதலாவது படத்திலும் யாழ்.வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளர், சேவை உத்தியோகத்தரிடம் வைப்புச் செய்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# தமிழ் மக்களின் கனவு நாடு கடந்த தமிழீழ அரசு

## இந்தியாவின் ஒத்தாசை இன்றி ஈழத்தில் அமைதி ஏற்படாது

"நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்" - புலம் பெயர் தமிழீழ மக்களின் இன்றைய கனவு இதுதான்! உலகில் தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இடம்பெற இருக்கிறார்கள் இந்த அரசாங்கத்தில். அதற்கான தேர்தல்கள் பல நாடுக்ளில் நடந்து முடிந்துவிட்டன. இந்த அரசாங்கத்தை எப்படி உருவாக்கலாம் என்ற சட்ட திட்டங்களை உருவாக்கும் மனிதர்களில் ஒருவராக இருக்கிறார் பொன் பாலராஜன்!

1980 - களில், மத்திய கிழக்கு நாடுகளில் பெற்றோலிய நிறுவனங்களின் ஆய்வுத் துறை.நிபுணராக இருந்த இவர், 1990-ல் கனடாவுக்குக் குடி பெயர்ந்தவர். அங்கு உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளில் கணினித்துறை விரிவுரையாளராகப் பணியாற்றியவர். தற்போது தகவல் தொழில்நுட்ப ஆலோசகராக இருக்கிறார். தமிழ் இலக்கியம், கவிதை ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடுள்ள இவரை, ஆனந்த விகடனுக்காக "காலம்" இதழின் ஆசிரியர் செல்வம் பேட்டி கண்டார்.



பொன் பாலராஜன்

கேள்வி:-"தற்போது என்ன விதமான வேலையில் நாடு கடந்த தமிழீழ அரசு கவனம் செலுத்தி வரு கிறது?"



பதில்:-"ஓர் அரசாங்கத்தை நிறுவும் பணிக்கு அடிநாதமாக இருக்கப்போகும் அரசியல் சட்டத்தினை உருவாக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. செப்டம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னதாக, அரசியல் சட்டமானது தயாராகிவிடும்.

இலங்கையில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் பற்றிய விசாரணைகளுக்கான ஆதாரங்கள் திரட்டப்பட்டு, அதற்குரிய பரப்புரைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக, இடைக்கால நிர்வாக அவைத் தலைவர் உருத்திர குமாரன் ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்பில் உள்ளார்!"

கேள்வி:-"விடுதலைப் புலிகளின் அமைப்பு மீண்டும் உருவாக வாய்ப்பு உள்ளதா? அப்படி உருவானால், அதற்கு நாடு கடந்த தமிழீழ அரசுடன் எவ்விதமான தொடர்பும் இருக்குமா?"

பதில்:-"விடுதலைப் புலிகள் என்றால் யார் என்பதற்கு முதலில் ஒரு விளக்கம் தேவைப்படுகிறது. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகளுக்கு உரிய வரைவிலக்கணமும் தற்போதைய வரைவிலக்கணமும் முற்றிலும் வேறுபடுபவை. தற்போது விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்திய ஒரு போராளிக் குழுவினர் அல்லர். 30 ஆண்டு காலப் போராட்டத்தில், விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் வாழ்வியலிலும், உணர்விலும், சொல்லப்போனால் அனைத்துமாகிக் கலந்துவிட்ட ஒரு நிலையினைக் காணக்கூடியதாக உள்ளது. தமிழர்களின் இறைமை, உரிமை என்பவை பற்றிச் சிந்திக்கும், செயற்படும் அல்லது பேசும் எவரையுமே தற்போதைய உலகம் ஒரு விடுதலைப் புலியாகவே காண்கிறது. அதாவது, தமிழ் மக்களின் விடுதலை உணர்வின் ஒருமித்த சிந்தனைதான் விடுதலைப் புலிகள். ஆயுதப் போராட்டம் முடிவடைந்தது உண்மைதான். ஆனால், விடுதலைக்கான தேவை இருக்கும் வரை போராட்டம் தொடரும். நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மக்களாட்சி நெறிப்படி அமைக்கப்பட்ட ஓர் அரசாங்கம் ஆகும். இதில் எந்தவிதமான ஆயுதப் போராட்டத்துக்கும் இடம் கிடையாது. ஆயுதப் போராட்டத்தினால் எமது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர். எமது கிராமங்கள் ஆயிரக்கணககில் அழிக்கப்பட்டும், எரிக்கப்பட்டும்விட்டன. ஆகவே, வன்முறையற்ற அரசியல் போராட்டம் அனைத்து நிலைகளிலும் தொடரவே செய்யும்."

கேள்வி:-"நீங்கள் இந்திய அரசாங்கத்துடன், தமிழக அரசுடன் பேச நேர்ந்தால், எதற்கு முன்னுரிமை தருவீர்கள்?"

பதில்:-"எங்களது கோரிக்கைகள் இவைதான்..

✦ ஈழத் தமிழர், இந்தியர் ஆகிய இருதரப்பினருக்கும் நீண்ட கால நன்மைகள் கிடைக்கக்கூடிய ஆரோக்கியமான உறவை உருவாக்க நாங்கள் விரும்புகிறோம். கடந்த காலக் கசப்பான அனுபவங்கள், எங்கள் எதிர்கால நல்லுறவைப் பாதிக்காதவாறு பார்த்துக்கொள்வது நல்லது.

✦ இலங்கையில் சீனாவின் செல்வாக்கும் ஆதிக்கமும், இந்தியாவின் பிராந்திய நலனை மிக மோசமாகப் பாதிப்பது மாத்திரம் அல்ல, இந்தியாவின் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாகும்.

✦ யாழ்ப்பாணப் பகுதியில் சீனாவின் செல்வாக்கும் ஆதிக்கமும், மற்றைய இந்திய மாநிலங்களை விட தமிழகத்துக்குத்தான் அதிகப் பாதிப்பு ஏற்படுத்தும்.

✦ இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும் நம் இனத்தின் தடுக்க முடியாத சாபக்கேடாகத் தொடர்கிறது.

✦ தமிழகத்தில் தமிழ் உணர்வாளர்கள் கைதாவதும், சிறையில் இருப்பதும் இவை அனைத்தையும் தாண்டிய கொடுமையாகும்.

✦ இந்தியாவின் தெற்குப் பிரதேசத்தின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரக்கூடியவர்கள் ஈழத் தமிழர்களே ஒழிய, சீனாவுக்குத் தனது கடற்பரப்பைத் தாரை வார்த்துக் கொடுக்கும் சிங்களவர்கள் அல்ல என்பதை இந்திய அரசாங்கம் உணர வேண்டும்.

✦ தமிழகத்தின் தொப்புள்கொடி உறவாகக் கருதப்படும் ஈழத் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார சுதந்திரத்தில் இந்தியா இதய சுத்தியுடன் செயல்பட வேண்டும்.

✦ ஈழத்தில் பாதிக்கப்பட்டவர் களின் நல்வாழ்வு, தடுப்பு முகாம்களில் அடைப[்ப]ட்டு அவதியுறும் மக்களி[ன்] விடுதலையும் மறுவாழ்வும் குறித்து இந்திய அரசும் தமிழக அரசும் கவலைப்பட வேண்டும். ... இப்படி நாங்கள் பேசுவதற்கு நிறைய இருக்கின்றன!"

கேள்வி:-" தமிழக மக்களிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?"

பதில்:-"தமிழகம் என்று சொல்லும்போது, ஒரு காதில் இன்பத் தேனும், மறு காதில் பெருமூச்சும் விழுகிறது. ஈழத்தமிழரின் விடுதலைக்கு மட்டுமின்றி, அனைத்துலகத் தமிழரின் மேம்பாட்டுக்கும் தமிழகமே உந்து விசையாக விளங்க வேண்டும். ஈழத் தமிழ் மக்கள் மீது தமிழகம் கொண்ட அக்கறையும் கரிசனமும் நாம் நன்கு அறிந்தவை. நாங்கள் மக்களாட்சி நெறிப்படி, வன்முறை இன்றி, அரசியல் செயற்பாட்டின் ஊடாக இந்திய அரசுக்கும் ஈழத் தமிழருக்கும் இடையே ஒரு நல்லிணக்கப் பாலத்தை அமைக்க தமிழகம் உதவ வேண்டும். நாம் விரும்பியோ விரும்பாமலோ இந்திய அரசின் உதவியும் ஒத்தாசையும் இன்றி ஈழத்தில் நிரந்தர அமைதிபற்றி உரையாட முடியாது!" □

ஆனந்த விகடன்

# இராணுவ நீதிமன்றின் தீர்ப்புக்களில் நம்பிக்கை கிடையாது - சரத் பொன்சேகா

(கொழும்பு)

இராணுவ நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் தீர்ப்புக்களில் தமக்கு நம்பிக்கை கிடையாது என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபாட கொள்வனவுகளின் போது மோசடிகளில் ஈடுபட்டதாக சரத்பொன்சேகா மீது இரண்டாவது நீதிமன்றம் குற்றம் சுமத்தியுள்ளது. சாட்சியங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுவதில் அர்த்தமில்லை, என சரத்பொன்சேகா சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆவணங்கள் மற்றும் சாட்சியாளர்களின் மூலம் தெளிவான சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அரச தரப்பு சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இராணுவ நீதிமன்ற விசாரணைகளில் நம்பிக்கை இல்லை எனவும் இறுதியில் தமக்கு தண்டனை வழங்கப்படப் போவது உறுதி எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரியன்சி அரசகுலரட்ன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுதக் கொள்வனவின் போது சரத் பொன்சேகா ஊழல் மோசடிகளில் ஈடுபட்டார் என்பதனை நிரூபிப்பதற்கு எவ்வித ஆதாரங்களும் முன்வைக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான மோசடிகள் தொடர்பான வழக்கு விசாரணைகள் இராணுவ நீதிமன்றில் நடத்தப்பட வேண்டிய அவசியம் கிடையாதென அவர் தெரிவித்துள்ளார்.

சில வேளைகளில் ஊழல் மோசடிகள் நடைபெற்றிருந்தாலும் அதற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளே எடுக்கப்பட முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ)

# ரணில் எதிர்க்கட்சித் தலைவராக நீடிப்பதற்கு அரசு ஆதரவளிக்கிறது

## ரீ-பி-ஏக்கநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராக நீடிப்பதற்கு அரசாங்கம் ஆதரவளித்து வருவதாக பிரதிக் கல்வி அமைச்சர் ரீ.பி.ஏக்க நாயக்க தெரிவித்துள்ளார்.

குருணாகல் பொல்பித்திகமவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், 18 ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவளித்த ஆறு ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களைத் தவிர வேறு பல உறுப்பினர்களும் ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் ரணில் விக்ரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராக நீடிக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் குறிப்பிட் உறுப்பினர்களை ஆளும்கட்சியில் இணைத்துக் கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும்கட்சியில் இணைந்து கொள்ள விரும்பும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் இணைத்துக் கொண்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி சென்றுவிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அரசாங்கம் பேணிப் பாதுகாத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலர் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ள நாட்டம் காட்டி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# கட்டாரிலிருந்து எரிகாயங்களுடன் நாடு திரும்பிய பணிப்பெண்

கட்டார் நாட்டில் சித்திரவதைக்குள்ளான பெண் ஒருவர் தீக்காயங்களுடன் முந்தல் வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளதாக முந்தல் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சந்தன சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

கட்டார் நாட்டில் வீட்டுப் பணிப்பெண்ணாகக் கடமையாற்றிய முந்தல் பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு தீக்காயங்களுடன் நாடு திரும்பிய நிலையில் சிகிச்சைக்காக முந்தல் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தான் கட்டார் நாட்டின் வீடொன்றில் பணிப்பெண்ணாகக் கடமையாற்றியதாகவும் அங்கு தன்னால் ஏற்பட்ட தவறொன்றின் காரணமாக அவ்வீட்டிலிருந்த பெண் தன் மீது சுடுநீரை வீசி தாக்கினார் எனவும் இதனாலேயே தனக்கு இந்தத் தீக்காயங்கள் ஏற்பட்டதாகவும் குறித்த பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

தான் கடந்த 13 ஆம் திகதி தாக்குதலுக்குள்ளானதாகவும் கடந்த புதன்கிழமை நாடு திரும்பியதாகவும் அப்பெண் பொலிஸாரிடம் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

# முல்லைத்தீவில் இரண்டு பாடசாலைகள் புதிதாக அமைக்கப்படவுள்ளன

முல்லைத்தீவு வட்டக்கச்சி பகுதியில் இரண்டு புதிய பாடசாலைகள் அமைக்கப்படவுள்ளன.

இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவர் நாமல் ராஜபக்ஷ எம்.பி., வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணை ந்து நேற்று முன்தினம் இதற்கான அடிக்கல் நாட்டினர்.

20 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதேவேளை வட்டக்கச்சி பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட மாணவ மாணவிகளின் கல்வி நடவடிக்கையை கருத்திற் கொண்டு வடமாகாண கல்வி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக கற்கை நிலையங்கள் இரண்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டதாக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

தலா 5 மில்லியன் ரூபா செலவில் நான்கு நிரந்தர கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளிலுள்ள பல பாடசாலைகளுக்கு நேரில் விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்த இந்தக் குழுவினர் அங்கு நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிட்டார். (ஸ்ரீ)

# 18.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 0096 - டொமிஷியன் கொலை செய்யப்பட்டதை அடுத்து நேர்வா ரோமப் பேரரசன் ஆனான்.
- 1502 - கிறிஸ்தோபர் கொலம்பஸ் தனது நான்காவதும் கடைசியுமான கடற்பயணத்தின் போது கொஸ்டா ரிக்காவில் தரையிறங்கினார்.
- 1635 - புனித ரோமப் பேரரசன் இரண்டாம் பேர்டினண்ட் பிரான்ஸ் மீது போர் தொடுத்தான்.
- 1739 - பெல்கிரேட் நகரம் ஒட்டோமான் பேரரசிடம் கையளிக்கப்பட்டது.
- 1759 - கியூபெக் நகரை பிரித்தானியர் கைப்பற்றினர்.
- 1809 - லண்டனில் ரோயல் ஒப்பரா மாளிகை திறக்கப்பட்டது.
- 1810 - சிலியில் முதலாவது அரசு (junta) அமைக்கப்பட்டது.
- 1812 - மொஸ்கோவில் பரவிய தீ நகரின் முக்கால் பகுதியை அழித்துவிட்டு அணைந்தது. பெட்ரொவ்ஸ்கி அரண்மனையில் இருந்து நெப்போலியன் கிரெம்ளினுக்கு வந்தான்.
- 1851 - நியூ யோர்க் டைம்ஸ் இதழ் முதன் முதலில் வெளியிடப்பட்டது.
- 1906 - ஹொங்கொங்கில் ஏற்பட்ட புயல் மற்றும் ஆழிப்பேரலையினால் 10,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1911 - ரஷ்யப் பிரதமர் பீட்டர் ஸ்டோலிப்பின் கீவ் ஒப்பரா மாளிகையில் சுடப்பட்டார்.
- 1914 - முதலாம் உலகப் போர்: தென்னாபிரிக்கப் படைகள் ஜெர்மனியின் தென் மேற்கு ஆபிரிக்காவில் தரையிறங்கினர்.
- 1919 - நெதர்லாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1924 - மகாத்மா காந்தி இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்காக 21 - நாள் உண்ணாநோன்பைத் தொடங்கினார்.
- 1932 - நடிகை பெக் எண்ட்விசில் ஹாலிவுட் சின்னத்தின் "H" எழுத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார்.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: இக்னேசி மொஸ்கிக்கி தலைமையிலான போலந்து அரசினர் ருமேனியாவுக்கு தப்பினர்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: பெலாரஸ் தலைநகர் மின்ஸ்க் நகரில் சொபொபோர் என்ற இடத்தில் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: டென்மார்க் யூதர்களை வெளியேற்ற ஹிட்லர் உத்தரவிட்டார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய நீர்மூழ்கிக் கப்பல் ஜப்பானின் ஜூனியோ மாரு என்ற கப்பலைத் தாக்கியதில் டச்சு, அவுஸ்திரேலிய, பிரித்தானியப் போர்க்கைதிகள் உட்பட 5,600 பேர் கொல்லப்பட்டனர்.
- 1959 - வன்கார்ட் 3 பூமியைச் சுற்றிவர அனுப்பப்பட்டது.
- 1960 - பிடெல் காஸ்ட்ரோ ஐ.நா கூட்டத்தொடரில் பங்குபற்ற நியூயோர்க் நகரை அடைந்தார்.
- 1962 - ருவாண்டா, புருண்டி, ஜமெய்க்கா ஆகியன ஐ.நாவில் இணைந்தன.
- 1964 - வியட்நாம் மக்கள் இராணுவம் தென் வியட்நாமினுள் நுழைந்தது.
- 1968 - இந்திய உளவுத்துறை நிறுவனம் றோ அமைப்பு உருவாக்கப்பட்டது.
- 1972 - இடியமீனினால் விரட்டப்பட்ட முதல் தொகுதி உகண்டா மக்கள் ஐக்கிய இராச்சியத்தை வந்தடைந்தனர்.
- 1974 - சூறாவளி ஹொண்டுராசைத் தாக்கியதில் 5,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1976 - பெய்ஜிங் நகரில் மா சே துங்கின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.
- 1977 - வொயேஜர் - I பூமியையும் சந்திரனையும் சேர்த்துப் படம் எடுத்தது.
- 1980 - சோயுஸ் 38 கியூபாவைச் சேர்ந்த விண்வெளி வீரருடனும் ஒரு ரஷ்யருடனும் விண்வெளி சென்றது.
- 1982 - லெபனானில் கிறிஸ்தவ துணை இராணுவத்தினர் 600 பாலஸ்தீனரைக் கொன்றனர்.
- 1988 - பர்மாவில் அரசியலமைப்பு நிறுத்திவைக்கப்பட்டது. மக்களாட்சிக்கு ஆதரவானோர் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். 8888 எழுச்சி முடிவுக்கு வந்தது.
- 1997 - 50.3 சதவீத வேல்ஸ் மக்கள் சுயாட்சிக்கு ஆதரவாக வாக்களித்தனர்.
- 2006 - கிழக்கிலங்கை, அம்பாறையில் 11 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1819 - லியோன் ஃபோக்கோ, பிரெஞ்சுஇயற்பியலாளர் (இ.1868)
- 1979 - வினய், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்

### இறப்புகள்

- 1180 - ஏழாம் லூயி, பிரான்சின் மன்னன் (பி. 1120)
- 1783 - லியோனார்டு ஆயிலர், சுவிஸர்லாந்து கணிதவியல் (பி.1707)
- 1945 - இரட்டை மலை சீனிவாசன், ஆதி திராவிடர் இயக்கத் தலைவர் (பி. 1859)
- 1961 - டாக் ஹமாஷெல்ட், சுவீடனைச் சேர்ந்த ஐ.நா சபையின் முன்னாள் பொதுச் செயலர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1905)
- 1966 - வித்துவான் க.வேந்தனார், ஈழத் தமிழறிஞர் (பி 1918)
- 1967 - ஜோன் கொக்றொஃப்ட், பிரித்தானிய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1897)
- 1978 - ஆபிரகாம் கோவூர், பகுத்தறிவாளர் (பி. 1898)

**1961 - ஐ.நா. சபையின் முன்னாள் பொதுச் செயலர் டாக் ஹமா ஷெல்ட் கொங்கோவில் அமைதிக்கான பேச்சுவார்த்தையில் பங்கேற்க சென்றபோது விமான விபத்தில் உயிரிழந்தார்.**



# ஈழத்தவர் வரலாறு

(39)

## 7.வன்னிச் சிற்றரசுகள்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

**வன்னிச் சிற்றரசுகள்**

வடவிலங்கையின் யாழ்ப்பாணக் குடாநாடு, தவிர்ந்த பெருநிலப்பரப்பு வன்னி எனப்படுகின்றது. பச்சிலைப்பள்ளியில் கச்சாய்ப் பகுதியும், சில காலங்களில் வன்னி மையாகக் கருதப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரங்களுள்ளன.


வடக்கே யாழ்ப்பாணக் கடனீரேரிக்கும் தெற்கே அருவியாற்றுக்கும் நுவகரகலாவியாப்பிரதேசத்திற்கும், மேற்கே மன்னாருக்கும் கிழக்கே திருகோணமலைக்குமிடையில் வன்னிப்பிரதேசம் அமைந்திருந்தது.

ஆங்காங்கு சிதறலாகக் கிராமியக் குளங்களை ஆதாரமாகக் கொண்டமைந்த காட்டுக்கிராமங்கள்,அடர்க்காடுகளால் சூழப்பட்டு விளங்கியுள்ளன. வரலாற்றுக்கு முந்திய காலத்தில்இப்பிரதேசம் நாகரிகம் வாய்ந்த மக்கட் கூட்டத்தினரின் குடியிருப் புக்களாக விளங்கியுள்ளன என்பதற்கு 1985 ஆம் ஆண்டு மேமாதம் 31 ஆம் திகதி குஞ்சுப் பரந்தனில் கண்டு அகழ்ந்தெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழி சான்றாகியது. வன்னி நாட்டில் முதன்முதல் கண்டறியப்பட்ட் தாழி இதுவே. திராவிட நாகரிகம் இங்கெல்லாம் பரவி நிலைகொண்டிருந்தது என்பதற்கு முறையான ஆதாரமாக இத்தாழி நமக்குக் கிடைத்துள்ளது.

வன்னிப்பிரதேசத்தில் குளக்குடியிருப்புகளே பெரிதும் பரந்துள்ளன. குளத்தின் பெயராலேயே அப்பகுதிக் கிராமங்களும் அழைக்கப்பட்டு வருகின்றன.

புளியங்குளம், கனகராயன்குளம், பெரிய புளியாலங்குளம், தென்னியன்குளம் என்ற பெயர்கள் குளங்களைக் குறிப்பதோடு அவ்விடத்துக் கிராமத்தையும் குறிப்பனவாகவுள்ளன.

எனவே, வன்னிப்பிரதேசத்தில் இன்று பாழடைந்து கிடக்கும் குளங்களையும் ஒவ்வொரு கிராமக் குடியிருப்பாகக் கருதில் வன்னிப் பிரதேச மக்கட்தொகை முன்னர் அதிகமாக இருந்திருக்கவேண்டும். வன்னிப் பிரதேசத்தின் ஆயிரக்கணக்கான குளங்களை அமைப்பதற்கு எவ்வளவு மனிதவலு தேவைப்பட்டிருக்க வேண்டுமென எண்ணும்போது இன்றைய வன்னிப்பிரதேச மக்கட்தொகை போலப் பலமடங்கு அன்று இருந்திருக்க வேண்டும்.இலட்சக்கணக்கான மக்களின் வாழிடமாக வன்னி விளங்கியிருக்க வேண்டும். வன்னி நாட்டின் வரலாற்றுச் சிறப்பினை அங்கு பாழடைந்து கிடக்கும் ஆயிரக்கணக்கான குளங்களும், முறிப்பு அணைகளும், கல் கலிங்குகளும், மடைகளும், சிதிலமடைந்த கோயில்களும், புராதன பாலங்களும், பாதைகளும் எடுத்துக் கூறுகின்றன. ஒவ்வொரு சிற்றாறுகளும் முழுமையாகப் பயன்கொள்ளப்பட்டிருக்கின்றனவென்பதை அவற்றின் வடிகாற்போக்கில் அமைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான தொடர்குளங்கள் எடுத்தியம்புகின்றன.



மணலாறு

வன்னிப் பிரதேசத்தில் காணப்படுகின்ற புராதன குளங்கள், கட்டட அழிபாடுகள், ஏனைய தொல்லியற் சான்றுகள் இப்பிரதேசம் ஒரு காலத்தில் இருந்த சிறப்பினை எடுத்துக் காட்டுவனவாகவுள்ளன. வன்னிப் பிரதேசத்தின் தென்பகுதி நதியான அருவியாற்றின் பிரதான கிளையாகிய கல்லாற்றில் அலவிச்சைகுளம் (ஈரற்பெரியகுளம்), பாவற்குளம் எனுமிரு புராதன குளங்களுள் என. " பாவற்குளத்தின் கலிங்குகளையமைக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கும் செங்கற்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தவை" என பாக்கர் குறிப்பிடப்பட்டுள்ளார்.



குஞ்சுக்குளம்

அருவியாற்றுக்கு அடுத்ததாக முக்கியம் பெறும்மேற்குக் கரையோர நதி மணலாறு எனப்படும் பறங்கியறாகும். மன்னாருக்கு அருகே இலுப்பைக் கடவையில் இது கடலையடைகின்றது.

மேற்கே பாயும் அடுத்த நதி பாலியாறு ஆகும். இந்த நதியில் பெலிவாவி என்றொரு நீர்த்தேக்கம் இருந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இது கி.மு.3ஆம் நூற்றாண்டில் தமிழரசன் எல்லாளனால் கட்டப்பட்டதாக புறோகியர் என்பார் கருதுகிறார். எல்லாளன் கட்டிய பெலி வாலி வவுனிக்குளமாகும். வசபன் என்ற மன்னனால் (கி.பி66 -110 ) அமைக்கப்பட்ட பாலிநகரம் இந்த வவுனிக் குளத்தின் அருகே இருந்துள்ளது.

1989 ஆம் ஆண்டு யூன் 8 ஆம் திகதி வவுனிக் குளத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவின் உதவி அரசாங்க அதிபர் நெவில், பாலியாற்றின் அருகே சிதிலமடைந்த கட்டமைப்புக்களை அவதானித்துள்ளார். கோவில் காடு என்ற இடத்தில் பாழடைந்த கோயில் ஒன்று காணப்பட்டது. தலை யில்லாத புத்தர் சிலையொன்றும் இடுப்புடன் உடைந்த விஷ்ணு சிலையொன்றும் அவ் விடத்தில் காணப்பட்டன. உடைந்த லிங்கம் ஒன்றும் இருந்ததெனக் குறிப்பிட்டுள்ளார்.


கரியாலைக்குளம், நாகபடுவான்குளம் ஆகிய இரண்டும் வன்னிப்பிரதேச புராதன நீர்ப்பாசனக் குளங்களாகும். அணைக்கும் கடலுக்கும் இடைப்பட்ட பரந்த பிரதேசத்தினை இவை நீர்ப்பாய்ச்சியுள்ளன. (தொடரும்)

# இலக்கிய வகைமை நோக்கில் கையறு நிலை

(04)

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

முனைவர் பி.கரிகாலன்
தமிழ்த்துறைத்தலைவர்
ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி
திருவானைக்கோவில், திருச்சிராப்பள்ளி -5



இங்கு பிரிவு என்பது மரணமாகிய பிரிவாக அமையாவிடினும் மரணத்தை ஒத்த துயருறுவதாகக் கம்பரால் சித்திரிக்கப்படுவதால் கையறுநிலை என்ற துறையில் அடக்கியுரைக்கலாம்.

மேலும் தைலமாட்டுப் படலத்தில் இராமன் பிரிவு தாங்காது தயரதன் இறந்துபட அவன் மனைவியர் புலம்பும் கூற்றுக்கள், வாலி வதைப் படலத்தில் வாலி கொல்லப்பட்ட பிறகு அவன் மகன் அங்கதன் 'எந்தையே எந்தையே' என்று புலம்பித் தவிப்பதும், தாரை புலம்பலும் மாயா சனகப் படலத்தில் சீதை இராவணனின் மாயம் அறியாது தம் தந்தை இறந்ததாகக் கருதிப் புலம்புவதும் அதிகாயன் வதைப் படலத்தில் அதிகாயன் இறந்ததும் அவன் தாய் தானியமாலி அலறி ஓயாப் பூசலிட்டு ஏங்குவதும் இராவணன் சோகப் படலத்தில் இந்திரசித்து இறந்ததும் இராவணன் - மண்டோதரி புலம்புவதும் கையற்றுப் புலம்பும் துறைப் பொருளொடு பொருந்துவனவே.

**கந்தபுராணம்**

இந்திரசித்து மறைவிற்கு வருந்தும் இராவணனைப் போன்று கந்தபுராணத்தில் சூரன் மகன் பானுகோபன் இறந்தபின் சூரன் "என்னைத் தனியே வைத்து எந்தையுமே குற்றனையால்" என்று (கந்த 4.11.165) புலம்புவதும் சூரன் மறைவிற்குப்பின் இரணியன் புலம்புவதும் இத் துறையின் பொருளொடு பொருந்தி அமைவனவே.

**இரட்சண்ய யாத்திரிகம்**

ஏசுநாதரின் சீவ சரிதம் கூறும் இரட்சண்ய யாத்திரிகத்தில் சிலுவை சுமந்து செல்லும் ஏசுவைக் கண்ட ஊர்மக்களின் புலம்பல் கம்ப ராமாயணத்தில் இராமன் பிரிவை எண்ணி வருந்தும் அயோத்தி மக்களை நினைவுறுத்தும்.

"காந்தண் மலர் செங்கமல
மலரைப்புடைப்பப்
பூந்தண் கருங்குவளைப் போது நீர்முத்து
உகப்ப"

(சிலு:16)என்ற பாடலடிகள் ஊர்ப் பெண்டிர் மார்பில் அறைந்து கொண்டு கண்ணீர் விட்டு வருந்துதலை உணர்த்தும்.

**நந்திக் கலம்பகம்**

காப்பியம் என்ற வகையைக் கடந்து சிற்றிலக்கியங்களிலும் கையறுநிலைப் பாடல்கள் இடம்பெற்ற தன்மையை நந்திக் கலப்பகம் கொண்டு அறியலாம். இதில் நந்தி மன்னன் இறந்தபின் புலவர் வருந்திப்பாடும்

"வானுறு மதியை அடைந்தது
உன்வதனம் ....
செந்தழல் அடைந்தது உன்மேனி
யானும் என்கலியும் எவ்விடம்புகுவோம்"

என்ற பாடல் குறிப்பிடத்தக்கது.

**நளன் அம்மானை**

நளனின் சரிதம் கூறும் நளன் அம்மானையில் விதியை எண்ணி 'இன்று நான் கண்டிருக்க என் விதியோ என்றழுது வேதம் விதியை விலக்க வல்லார் உன்டோ' என்று தமயந்தி புலம்புகிறாள் (ந.அம்.2448-49). மேலும் நளன் நாடிழந்த நிலையில்

"மண்ணிற்கு ஒரு பாவம் மனதறியச்
செய்ததுண்டோ
வேதன் விதியாலே மேதினியில்
நாமிருந்து
ஆதி மறையோரை அநியாயம்
செய்தோமோ
என்ன விதியோ" (ந.அம்.2212.15)

என்று தனக்கு நேர்ந்த இழப்பைத் தானே எண்ணிப் புலம்புவதும் கையறுநிலையுட் படுவதே.

**இலாவணி**

இலாவணி மராத்தியர்களிடமிருந்து வந்த நாட்டுபுறக் கலைவடிவம் என்பர். கோவில் திருவிழாக்களில் காமன் கதையை எரிந்த காட்சி என்று பாணு வாது புரிவர். காமதகன விழாவின் இறுதியில் காமன் மண்டபம் முழுமையும் எரியூட்டப்படும். அப்போது ஊரார் பல்வேறு வண்ணப் பொடிகளைப் பூசிக் கொண்டு மாரடித்துக் கொண்டு

"அல்லிமலர் முல்லை மலர் அசோக
மலர் நீல மலர்
ஆய்ந்து மலரால் பாணம் அடிக்கரும்பி
வில்லாக்கி
ஆதிசிவன் மேல் பாணம் அடித்தானே
மன்மதனும்"

என்று ஒப்பாரி வைத்து வருந்துவர். மேலும் ரதிவரம் கேட்டுப் புலும்பும் நிலையில்

"அக்கினிக் கண்ணாலே அங்குகனை
எரித்திடவே
அரனாரே என் தகப்பா அழுத்தமுள்ள
நெஞ்சாச்சே
இனியென்ன செய்வேன் ஏதுசெய்வேன்
தாயாரே
என் கணவரை மீட்டு வரமளிக்கும்
தாயாரே" (தொடரும்)

# மிளகாயில் பீடைகளும் முகாமைத்துவமும்

12-IV

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### மிளகாய் வாடல் நோய் (Wilt disease)


மிளகாய்ப் பயிரில் பாதிப்பை ஏற்படுத்தும் நோய்களின் வரிசையில் வாடல் நோயும் முக்கியமானது.ஏனைய நோய்களை விட வாடல்நோய் பாரதூரமானது.

ஏனெனில் வாடல் நோய் ஏற்படுமிடத்து அது எந்தப் பயிரின் வயதினதாயினும் முழுமையாகவே பயிரை இழந்துவிடும் வாய்ப்பு இந்நோய்க்குரிய சிறப்பியல்பு. மிகவும் அவதானமாக இல்லாதுவிட்டால் இந்த நோயின் தாக்கத்திலிருந்து மீளுவது கடினமாக இருக்கும்.

வாடல் நோயினை (Wilt) பல காரணிகள் ஏற்படுத்தும் என அறியலாம். பொதுவாகவே வாடல் என்னும்போது பயிருக்கு தேவையான நீர் உள்ளெடுக்கப்பட்டாமையினால் நீரின்றி பயிர் வாடுதலைக் குறிக்கும். நீர்ப் பாய்ச்சுவதைத் தவிர்ப்பதாலோ அல்லதுவரட்சியின் காரணமாக நீர் கிடைக்காமல் வாடுவதை நாம் கண்ணுற்றிருக்கிறோம். இவ்வாறான வாடுதலின் போது நீர் கிடைத்து விட்டால் அதாவது நீர் பாய்ச்சினால் அல்லது மழைபெய்தால் வேண்டிய நீரின் தேவை பூர்த்தி செய்யப்பட்டதால் பயிர் வாடிய நிலையிலிருந்து பழையபடி சாதாரண நிலைக்கு வந்து விடும்.இப்போது வாடியதால் ஏற்பட்ட அறிகுறிகளனைத்தும் அகன்று விடும். இந்த நிலைமை பயிர்முழுமையாக வாடி விட்டால் மீண்டும் வளர முடியாது என்பதனை நினைவில் கொள்க.

வாடல்நோயை ஒருவகை பூஞ்சணமும், பக்ரீரிறியாவும் தோற்றுவிக்கின்றன

இரண்டு வெவ்வேறான நுண்ணங்கிகளினாலும் தோற்றுவிக்கப்படும் வாடல் நோயின் அறிகுறிகளுமே (Symptoms) வேறானவை. விவசாயிகளினதும் இக் கட்டுரைத்தொடரை வாசிக்கும் அனைத்து வாசக நேயர்களையும் விஞ்ஞானத்தின் பால் சற்று இன்னும் அழைத்துச் சென்று இந் நோய் பற்றி விளக்க முற்பட்டுள்ளேன். என் இனிய உறவுகளுக்கும் விபரம் தெரிந்தால் பயிர் செய்து வாடியிருக்கும்.எங்களது ஏனைய படிப்பறிவற்ற உறவுகளுக்கும் தெரியப் படுத்த, எடுத்துக்கூற ஏதுவாக இருக்கும் என்ற ஒரு அற்ப ஆசையினாலேயே.




### பூஞ்சணத்தினால் ஏற்படும் வாடல்

மிளகாயில் வாடல் நோயை பியூசேரியம் சொலனி (Fusarium solani) என்னும் மண் வாழ் பூஞ்சணம் தோற்றுவிக்கின்றது. பியூசேரியம் என்னும் பூஞ்சணம் ஒரு அழுகல் வளரியாக மண்ணிலுள்ள இறந்த தாவரக் கழிவுகளில் தங்கி தப்பிப் பிழைத்து வாழ்ந்து வரும் பூஞ்சணமாகும். தருணம் கிடைத்தால் எங்களூரில் உள்ள ஒரு சிலரைப் போல பயிருக்குள் தொற்று ஏற்படுத்தி பின் பயிர் முழுக்க தனது பூஞ்சண இழைகளைப் பரப்பி, வளர்ந்து பயிரையே பின் அழித்து விடும் வல்லமை கொண்டது.

குறிப்பாக இப்பூஞ்சணம் பயிருக்குள் இலகுவாகச் சென்றடைய முடியாததாகும். ஆனால் உள்ளே செல்லவழி கிடைத்து விட்டால் பின்னர் தனது வலிமையைக் காட்டிவிடும். நாம் விளைவிக்கும் பயிர் நலிவுற்றால் அல்லது வேறு பூச்சிப்படைகளினால் வேர்ப்பகுதியில் தாக்கப்படும் போது அந்த சேதமடைந்த பகுதியினூடு உட்சென்று விடும். இதனால் பயிரை நலிவடைய விடாது நாம் பாதுகாத்துக் கொள்ளுதல் அவசியம்.

பியூசேரியம் பூஞ்சணம் தாவரத்தின் வேர்ப்பகுதியினூடாக உட்சென்றால் அங்கிருந்து தாவரத்தினுடைய சாற்றை உறிஞ்சி பூஞ்சண இழையை வளர்க்கத் தொடங்கி விடும். அதன்பின் இலிங்கமில் வித்திகளை அதிக எண்ணிக்கையிலேயே உற்பத்தி செய்யவும் தொடங்கிவிடும். பூஞ்சண இழைகளும் வித்திகளும் தாவர கலன்கட்டில் காழ்ப் பகுதிகளுள் விடப்படுவதனால் காழினூடாக நீர்மேல்நோக்கி செல்லும்போது காழினுடைய அதிக எண்ணிக்கையிலான குழாய்களை இவ்வித்திகளும் பூஞ்சண இழைகளுமாக சேர்ந்து அடைத்து விடும். ஆரம்பத்தில் இந்த அடைப்பு சிறிது சிறிதாகவே இருப்பதனால் கலன்கட்டிலுள்ள குழாய்களின் நீரை அகத்துறிஞ்சி மேலே செலுத்தும் தொழிற்பாடு தடைப்பட பயிர் மெல்ல வாடத் தொடங்கும்.நிலத்தின் மேற்பக்கமாக நிகழும் ஆவியுயிர்ப்பினூடான நீரிழப்பை சமன்செய்ய உள்ளிழுக்கப்படும் மற்றும் மேல் நோக்கி எழும்நீரினளவு போதாமையினாலே பயிர் வாடத் தொடங்கும். (தொடரும்)

union assurance
Trust in your tomorrow, today.

# பதவி வெற்றிடங்கள்

கடந்த 23 வருடங்களாக இலங்கை வாழ் மக்களுக்கு ஆயுள் காப்புறுதி சேவையை சிறப்பாக வழங்கி வரும் யூனியன் அஷ்யூரன்ஸ் வடமராட்சி வாழ் மக்களுக்கு ஓர் சிறப்பான ஆயுட்காப்புறுதி சேவையைத் தொடர்ந்து வழங்குவதற்காக தகைமையுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- காப்புறுதி ஆலோசகர்
- காப்புறுதி நிதி ஆலோசகர்
- தனி நிதி முகாமையாளர்

**தகைமைகள்**

- க.பொ.த.சாதாரண தர கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி.
- சந்தைப்படுத்தல் முன் அனுபவம் விரும்பத்தக்கது (முக்கியமல்ல).
- தற்போது A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் நேர்முகத் தேர்விற்கு தோற்றலாம்.
- வன்னிப்பிரதேசத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (வன்னிப்பிரதேசத்தில் எமது கிளைகள் அமைக்கப்படும்பொழுது இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)




**உங்கள் கடுமையான உழைப்புக்குத் தகுந்த வெகுமதிகளுடன் கூடிய வருமானம் கிடைக்கக் கூடிய கௌரவம் மிக்க தொழில்துறையில் முன்னேற விரும்பினால் நீங்கள் எதிர்பார்க்கும் அருமையான சந்தர்ப்பம் இதுதான் .**

**வாருங்கள் உலகத்தரம் வாய்ந்த தொழில்துறை நிபுணர்களோடு இணைந்து நன்மைகளை அடைந்து கொள்வதோடு உலகத்தரம் வாய்ந்த பயிற்சிகளையும் அபிவிருத்தி வசதிகளையும் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் தொழில் துறை முன்னேற்றத்துக்கான உறுதியான எதிர்பார்ப்புகளோடு கவர்ச்சிகரமான கொடுப்பனவு. தொழில் தேடுவதை நிறுத்துங்கள். காப்புறுதி ஆலோசகராக யூனியன் அஷ்யூரன்ஸ் உடன் இணைந்து கொள்ளுங்கள். வாருங்கள் வாய்ப்பினை அடைந்து கொள்ளுங்கள்.**

குறிப்பு :- வேறு துறைகளில் வேலை செய்பவர்கள் or ஓய்வு பெற்றவர்கள பகுதி நேரமாக தொழில் புரிய முடியும்.
நேர்முகத் தேர்விற்கு சுய விபரக்கோவையுடன் சமூகம் தரவும்.

**விற்பனை முகாமையாளர்**
**0773422722**
**0113158153**

**இடம்:- யூனியன் அஷ்யூரன்ஸ்**
**(வேலாயுதம் மகாவித்தியாலயம் அருகில்)**
**347/1 பிரதானவீதி, பருத்தித்துறை.**
**காலம்:-20.09.2010 (திங்கட்கிழமை)** **நேரம்:- 9.30 a.m**

# பாடல் முடிந்த பறவை "போறாளே பொன்னுத்தாயி"

"கறுப்பு மின்னல்" முரளியின் மறைவையே தாங்க முடியவில்லை. அதற்குள்ளாக, தேன் குரல் பாடகி சொர்ணலதாவின் மறைவு, திரையுலகை மேலும் தவிப்பில் ஆழ்த்தி இருக்கிறது. "கேப்டன் பிரபாகரன்" படத்தில் "ஆட்டமா... தேரோட்டமா", "சின்னத்தம்பி"யில் "போவோமா ஊர் கோலம்", "கருத்தம்மா"வில் "போறாளே பொன்னுத்தாயி" போன்ற இவரது ஜிலீர்க் குரல் பாடல்கள் ... காலத்தால் அழியாதவை!

சொர்ணலதாவின் குடும்பம் பெரிது. நான்கு அண்ணன்கள், நான்கு சகோதரிகளுடன் கூட்டுக் குடும்பமாகவே வாழ்ந்து வந்தார். ஏனோ தெரியவில்லை, சகோதர - சகோதரிகளில் இவருக்கு மட்டும் திருமணம் ஆகவில்லை.

கடந்த சில வருடங்களாக நுரையீரல் கோளாறால் பாதிக்கப்பட்டு இருந்தார் சொர்ணலதா. அவ்வப்போது மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்து வந்தார். இந்த நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன் சுவாசக் கோளாறு முன்பைவிட அதிகமாகி... சென்னை அடையாறு மலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்த முறை நோயின் தீவிரம் அதிகமாகி, அது அவரது கிட்னியையும் பாதிக்கவே... கடந்த 12ஆம் திகதி, காலையில் அவரது உயிர் பிரிந்தது.

சாலிக்கிராமத்தில் உள்ள வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இருந்தது, அந்தப் பாடல் பறவையின் ஜீவனில்லாத கூடு. பின்னணிப் பாடகர்கள் எஸ்.பி.பி, மலேசியா வாசுதேவன், உன்னிமேனன், ஸ்ரீனிவாஸ், முகேஷ், சுஜாதா, ஸ்வேதா மற்றும் இசையமைப்பாளர் கணேஷ் உட்பட பலரும் வந்து அஞ்சலி செலுத்திய வண்ணம் இருந்தனர்.

அங்கே மிகவும் சோகவயப்பட்டு நின்ற பின்னணிப் பாடகி சுஜாதாவிடம் பேசியபோது, "சொர்ணலதாவோட நிறையப் பாடல்கள் எனக்குப் பிடிக்கும். குறிப்பா, அந்த 'மாலையில் யாரோ... மனதோடு பேச...', ரொம்பவும் விசேஷமான ஒண்ணு. ஃபாஸ்ட் நம்பர்ஸ், மெலடி இரண்டிலுமே சோபித்தவர் இவர். எந்தப் பாட்டா இருந்தாலும், இவரோட குரலுக்குன்னு ஒரு தனியான அடையாளம் பளிச்னு தெரியும். சொர்ணலதா அதிகம் பேசமாட்டார். ரொம்பவும் மென்மையான சுபாவம் கொண்டவர். எப்பவும் அமைதியாவே இருந்தவர், இனி யாருமே பேச முடியாத நிரந்தர அமைதிக்குப் போயிட்டார்.

எனக்கு இந்த நேரத்தில் எழுகின்ற ஓர் ஏக்கம் ... நம்ம இசையமைப்பாளர்கள் எல்லோருமே அவரது குரலை இன்னும் நிறையப் பாடல்க ளில் பயன்படுத்தி இருக்கலாம்..." - நிஜமான ஆதங்கம் அந்த இசைத் தோழியின் கண்களில் நீர்த்துளிகளாக மின்னியது.

சொர்ணலதாவின் உடல் போரூர் மயானத்துக்கு அம்புலன்ஸிலேயே கொண்டு செல்லப்பட்டது.

சொர்ணலதா



மின் தகனத்துக்கான உலை அவரது உடலை உள்வாங்கிக் கொண்டபோது... "போறாளே பொன்னுத்தாயி" என்று தீராத சோககீதம் இழைத்தன அங்கிருந்த அன்பு உள்ளங்கள்!

**என். அண்ணாமலை**

## உரமானிய பழவம் விநியோகம்

(தனங்கிளப்பு)

மறவன்புலோ விவசாய சம்மேளனத்தின் எல்லைக்குட்பட்ட விவசாயகளுக்கான உர மானிய படிவ விநியோகம் நாளை ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடையவுள்ளதால் அப்பகுதி விவசாயிகள் அனைவரும் அன்றைய தினம் மறவன்புலோ கிராமசேவையாளர் அலுவலகத்திற்கு வருகைதருமாறு அமைப்பின் செயலாளர் க.குகநாதன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4-37)

## கட்சி அலுவலக திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினர் பணிமனையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மல்லாகம் நீதிமன்ற வீதிக்கருகில் திறந்து வைக்கப்படவுள்ளதாக கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## மனோ-பிரபா கணேசன் சகோதரர்களுக்கு இடையிலான விரிசல் நிலைமைகள் உக்கிரம்



(கொழும்பு)

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் மற்றும் அவரது சகோதரரும் பாராளுமன்ற உறுப்பினருமான பிரபாகணேசன் ஆகியோருக்கு இடையிலான விரிசல் நிலைமைகள் உக்கிரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தொழிற்சங்கமான ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸைக் கைப்பற்றுவதற்கு பிரபா கணேசன் முனைப்புக்களைக் காட்டியதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆளும் கட்சியில் இணைந்து கொண்டுள்ள பிரபா கணேசனின் இந்த முயற்சிக்கு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இந்த எதிர்ப்பின் காரணமாக பிரபா கணேசன் புதிய தொழிற்சங்கமொன்றை உருவாக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனநாயக மக்கள் காங்கிரஸ் என்ற பெயரில் புதிய தொழிற்சங்கமொன்றை உருவாக்கத் தீர்மானித்துள்ளதாக பிரபா கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

புதிய தொழிற்சங்கம் அமைக்கும் பணிகள் 75 வீதம் பூர்த்தியாகியுள்ளதாகவும் விரைவில் புதிய தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கம் அமைக்கும் தமது முயற்சிகளுக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவளித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தொழிற்சங்கத்தை தம்மிடம் ஒப்படைக்கு மாறு மூன்று மாகாண சபை உறுப்பினர்களின் ஊடாக தாம் மனோ கணேசனிடம் கோரியதாக அவர் தெரிவித்துள்ளார்.



குறித்த தொழிற் சங்கத்தில் 7000 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தொழிற்சங்கத்தில் கடந்த 12 வருடங்களாக நிதிச் செயலாளராக தாம் கடமையாற்றி வருவதாகவும் உரிய நேரத்தில் புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்குவது குறித்தும் கவனம் செலுத்தப்படும் என பிரபா கணேசன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

## கடலில் குளிக்கச் சென்ற மாணவரின் சடலம் இதுவரை கண்டெடுக்கப்படவில்லை

(கொழும்பு)

கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நான்கு நண்பர்களுடன் குளிக்கச்சென்று காணாமல் போன பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட கல்முனை கார்மேல் பற்றிமாக் கல்லூரியின் மாணவனான துரைரத்தினம் அனோஜன் என்பவரின் சடலம் இன்னும் கரை யொதுங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாண்டிருப்பைச் சேர்ந்த பிரபல மனோ தத்துவ வைத்திய அதிகாரி டாக்டர் குமுதினி துரைரத்தினத்தின் ஏக புதல்வன் அனோஜன் (வயது 17) என்பவரே கடலில் மூழ்கிய மாணவனாவார்.

கடலில் மூழ்கிய மாணவனைத் தேடி சுழியோடிகள் சகிதம் தேடி வருகின்ற போதிலும் இதுவரை சடலம் அகப்படவில்லை.

கல்முனை கார்மேல் பற்றிமாக் கல்லூரி உயர்வகுப்பு மாணவனான அனோஜனுக்கு ஒரே ஒரு சகோதரி உள்ளார்.

தந்தையார் பற்றிமாக் கல்லூரியின் உயர்தர இரசாயனவியல் ஆசிரியராவார். (ஸ்ரீ)


Mega கொம்ப்யூட்டர் புலமைப்பரிசில்







ஏசியன் மெகா - அமோக வரவேற்பு காரணமாக மீண்டும் ஓர் அரிய வாய்ப்பு

அனேக மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் இம்முறை உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களின் விருப்பத்திற்கும் வேண்டுகோளிற்கும் இணங்க மெகா புலமைப்பரிசில் திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். எதிர்வரும் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணிமுதல் நடைபெறும் கொம்ப்யூட்டர் பாடநெறிகளைத் தெரிவுசெய்வதற்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி வெற்றிபெறுங்கள்.

சர்வதேச கற்கைநெறிகள் மற்றும் சான்றிதழ்களுக்கான ஓர் ஆரம்பம்.

பரீட்சைகள் எமது யாழ்.நகர், நெல்லியடி, சாவகச்சேரி கிளைகளில் நடைபெறும். செப்டெம்பர் 19 ஞாயிறு

CSC-ASIAN COMPUTER EDUCATION

Win 75% Schol.

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399

230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-2270267

எவனாவது உன்னை ஒருமுறை காட்டிக் கொடுத்தால் அது அவன் குற்றம்.
– ருமேனியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மக்களே! ஆசாடபூதிகளின் வேஷத்தை கண்டறியுங்கள்

விடுதலைப் புலிகளின் தோல்வி என்பது அரசுக்கு வெற்றி என்று யாரேனும் கூறுவார்களாயின் அதனை நூறுவீதம் ஏற்றுக் கொள்வது சரியானதாகும்.

ஆனால் விடுதலைப்புலிகளை அரசு தோற்கடித்தது என்று கூறப்படும் கருத்தை நூறு வீதம் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனெனில் விடுதலைப்புலிகளை போரில் வெற்றிகொள்வதற்கு முன்னதாகவே விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் பலர். அதில் விடுதலைப் புலிகளோடு சேர்ந்திருந்து அவர்களுக்கு ஆதரவாளர்கள் போல் நடித்து தங்களின் காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடித்தவர்களே முக்கியமானவர்கள்.

விடுதலைப் புலிகளுக்குத் தவறான தகவலைக் கொடுப்பது, அதன் மூலம் தங்கள் சுயலாபத்தை அதிகரித்துக் கொள்வது என்ற செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள் விடுதலைப்புலிகளின் தோல்விக்குப் பின்னர் அதிரடியாகத் தங்களை மாற்றிக் கொண்டனர்.

இத்தகையவர்கள் இப்போது தங்களை தமிழ் மக்களின் உரிமைக்காக பாடுபட்ட தூய போராளிகளாகக் காட்டிக்கொள்ள முற்படுகின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு தவறாகத் தகவலைக் கொடுத்து புலிகளின் விசுவாசத்துக்கு ஆளாகி, தங்களின் காரியங்களை கனகச்சிதமாக செய்து பிழைப்பு நடத்தியமை ஒரு புறம்.

மறு புறத்தில் படைத்தரப்பு, ஆளுந்தரப்பு என்பவற்றுடன் நல்லுறவைப் பேணி அதன் மூலம் அத்தரப்பின் கிடைப்பனவுகளை வெற்றுக் கொண்டமை என அங்கும் இங்கும் திருகுதாளம் போட்டவர்களே விடுதலைப் புலிகளின் தோல்விக்கு மூலகாரணமாகினர்.

இத்தகையவர்களை மக்கள் இனங்காணாதவரை அவர்களை தோற்கடிப்பது மிகவும் கடினமான காரியமாகும்.

அதேநேரம் இவர்களால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பயங்கரமானவை. அரசியல், பதவி, அதிகாரம் என்பவற்றுக்காக இவர்கள் போடக்கூடிய வேஷம் சாதாரணமானதல்ல.

இந்த வேஷங்களை புலனாய்வுத்துறையில் மிகவும் உன்னதமாக இருந்த விடுதலைப் புலிகளாலேயே கண்டறிய முடியவில்லை எனில், சாதாரண மக்களாகிய எங்களால் எப்படி முடியும்?


ஓ! எனதருமை தமிழ் மக்களே! கடவுளைப் பிரார்த்தியுங்கள். இறைவா! உனது கிருபையால் இந்த ஆசாடபூதிகளை இல்லாதொழித்து விடு.

எதிர்காலத்திலாவது எங்கள் வாழ்வு–எங்கள் உரிமை எங்களுக்குக் கிடைக்க உதவி செய்.

இதைவிட இவர்களிடம் இருந்து நாம் தப்பிக் கொள்வது கடினமே.

# 18ஆவது திருத்தச் சட்ட மூலத்தை எதிர்க்கும் உரிமை பிரித்தானியாவிற்கோ, அமெரிக்காவிற்கோ கிடையாது

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

18 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை எதிர்க்கும் உரிமை பிரித்தானியாவிற்கோ அல்லது அமெரிக்காவிற்கோ கிடையாது என ஜே.என்.பி.யின் தலைவரும் வீடமைப்பு அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

18 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்தியதன் மூலம் அரசாங்கம் நாட்டின் எந்தவொரு சட்டத்தையும் மீறிச் செயற்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதனை தடுத்தல் மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு இடையூறு ஏற்படுத்தல் ஆகியவற்றை நோக்ககாக் கொண்ட சில எதிர்க்கட்சிகளும் மேற்குலக சக்திகளுமே அரசியல் சாசனத் திருத்தங்களுக்கு எதிர்ப்பை வெளியிடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத் திருத்தங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் இதனை சட்டத்திற்கு முரணானதென எவரும் சுட்டிக்காட்ட முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக விரோத செயல் களில் அரசாங்கம் ஈடுபடுவதாகத் தெரிவித்து சில தரப்பினர் தேவையற்ற வகையில் உள் விவகாரங்களில் மூக்கை நுழைப் பதாகவும் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் இறுதிக்கட்ட யுத்தத்தின் போதும் பல மேற்குலக நாடுகள் அவற்றை தடுப்பதற்கு முனைப்பு காட்டியதாகவும் அதே சக்திகள் தற்போது அரசியல் சாசனத் திருத்தங்களுக்கு எதிராக குரல் கொடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு அபிவிருத்திப் பாதையில் செல்வதனை ஜே.வி.பி. விரும்பவில்லை எனவும் அதனால் இவ்வாறான எதிர்ப்புக்களை வெளியிட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# தமக்கான சட்டத்தரணிகளை நியமிப்பதில் நிதிச்சிக்கலை எதிர்நோக்கியுள்ள அகதிகள்

(கொழும்பு)

கனடாவின் வான்குவாரில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் தமக்கான சட்ட பூர்வ விசாரணைகளுக்கு சட்டத்தரணிகளை நியமித்துக் கொள்வதில் நிதிச் சிக்கலை எதிர்கொள்வதாக சட்ட சேவைகள் சமூகத்தின் தலைவர் ரோன் ஹேறாலிவே தெரிவித்துள்ளார்.

சன்.சீ.கப்பல் மூலம் கனடா சென்ற 492 பேரும் சட்டபூர்வமான அகதி அந்தஸ்து கோரியுள்ள நிலையில் அவர்களுக்கு சட்டத்தரணிகளின் ஒத்துழைப்புகள் தேவையாகவுள்ளன.

எனினும் அதனைப் பெற்றுக்கொள்வதில் நிதிச் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை தவிர்க்கும் வகையில் தாம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிலை தொடரும் பட்சத்தில் அகதிகள் முழுமையான விசாரணைகளில் பங்கேற்க முடியாது போகக் கூடிய நிலைமை ஏற்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# எச்.என்.பியின் வாடிக்கையாளர் நிலையத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் சங்கானை வாடிக்கையாளர் நிலையம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 11.30 மணியளவில் இல. 146, பிரதான வீதி, சங்கானையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ஏ.ஜே.அலஸ் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வங்கிக் கிளையை திறந்து வைக்கிறார். (ச-6)

# பாகிஸ்தான் அரசியல்வாதி லண்டனில் படுகொலை



பாகிஸ்தானின் முன்னணி அரசியல்வாதிகளில் ஒருவரான இம்ரான் பாரூக் லண்டனில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு லண்டனில் காணப்படும் பாரூக் கின் வீட்டிற்கு எதிரில் இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அரசியல் சர்ச்சை காரணமாக பாரூக் நாட்டை விட்டு வெளியேறி கடந்த சில காலமாக அவர் லண்டனில் வாழ்ந்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. பாரூக் எம்.கி.எம்.கட்சியின் முக்கிய உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. 50வயதான பாரூக்கின் மீது கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் தலை மற்றும் ஏனைய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர். கடுமையான காயங்களினால் பாரூக் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பாரூக்கின் மறைவையொட்டி பாகிஸ்தானில் பத்து நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என எம்.கீ.எம்.கட்சி அறிவித்துள்ளது.

இந்தப் படுகொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து பாகிஸ்தானின் கராச்சியில் வன்முறைகள் வெடித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாரூக்கின் பாகிஸ்தான் இல்லத்திற்கு எதிரில் பெரும் எண்ணிக்கையிலான கட்சி ஆதரவாளர்கள் குழுமியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படுகொலைச் சம்பவம் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது.

அரசியல் தஞ்சமடைந்த பாரூக் 1999 ஆம் ஆண்டு முதல் லண்டனில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாரூக்கின் இறுதிக் கிரியைகள் பாகிஸ்தானின் கராச்சி நகரில் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ)

# மாணவர்களுக்கான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் அழகியற் கலைப் பிரிவின் ஏற்பாட்டில் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பப் பாடசாலை மாணவ மாணவியரின் திறமைகளை விருத்தி செய்யும் ஓவிய, நடனதசங்கீதப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் விண்ணப்பத்தினை பூர்த்திசெய்து அருகிலுள்ள யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு குறிப்பிடப்படுகிறது.

அத்துடன் இப்போட்டிகள் மூன்று கட்டங்களாக நடத்தப்படும் என கல்வி அமைச்சின் அழகியற்கலைப் பிரிவு கல்விப் பணிப்பாளர் துஷார குணதிலக தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4-136)

# சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



உயர்ந்த இலட்சியம் ஒன்றை உறுதியாகப் பற்றிக் கொண்டு, உன் வாழ்வை அதற்காகவே விட்டுவிடு. "இறப்பது உறுதி ஒரு பெரிய நோக்கத்திற்காக உயிரைத் துறப்பது மிக மிக உயர்ந்தது."

சுதந்திரர்களானதும் பைத்தியம் பிடித்தவர்களைப் போல சமுதாயத்தை விட்டு காட்டிற்கு ஓடி குகைகளில் வாழ்ந்து உயிரை விட வேண்டிய அவசியம் இல்லை. இருந்த இடத்தில் இருந்து கொண்டே, எல்லாவற்றையும் நன்கு புரிந்து கொள்வோம்.

எல்லையற்ற ஆற்றல், உண்மை, நிறைவு இவை நமதே. இவற்றை நாம் பெறவேண்டியதில்லை. ஏனெனில் அவை நம்முடையவையே. அவற்றை வெளிப்படுத்த வேண்டும். அவ்வளவு தான்.



தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் சம்பந்தமான கலந்துரையாடல் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரையாற்றுவதையும் அருகில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பதில் மாவட்ட இணைப்பாளர் எஸ்.வைரமுத்து ஆகியோர் அமர்ந்திருப்பதையும் இதில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## ஆற்றுகை மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். எடிசன் அக்கடமியினால் நடத்தப்படும் ஆங்கில மொழி மூலமான "ஆற்றுகை மதிப்பீடு" நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் சுப்பிரமணியம் தியாகலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ஸ்ரீ-4)

## வடமராட்சி கிழக்கில் இருபாடசாலைகள் நாளை மறுதினம் திறக்கப்படவுள்ளன

(அல்வாய்)

வடமராட்சி கிழக்கில் இடம்பெயர்ந்த மாணவர்களின் நன்மை கருதி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு உடுத்துறை மகா வித்தியாலயமும், மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையும் திறக்கப்படவுள்ளன.

இதில் உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு அதிபராக வே.புவனேந்திரராஜாவும், மருதங்கேணி இ.த.க பாடசாலைக்கு அதிபராக செ.ஸ்ரீராமசந்திரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இப்பகுதியில் அமைந்துள்ள ஆழியவளை சி.சி.த.க பாடசாலையும் தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையும் விரைவில் திறக்கப்படவுள்ளன.

இதேவேளை சேவாலங்கா நிறுவன பிரதிநிதிகள் மாமுனை அ.த.க.பாடசாலை மற்றும் செம்பியன்பற்று றோ.த.க பாடசாலை ஆகியவற்றை பார்வையிட்டு புதிய கட்டடத் தொகுதியை அமைத்துத் தருவதாக உறுதியளித்துள்ளனர். அத்துடன் STC நிறுவனம், கல்வித் திணைக்கள பொறியியலாளர் கே. சிவபாலனுடன் உடுத்துறை மகா வித்தியாலயத்தைப் பார்வையிட்டு அதனை திருத்தித் தருவதாகவும் உறுதியளித்துள்ளனர்.

இதேவேளை இங்குள்ள பல பாடசாலைகளின் கூரை, மலசல கூடம், ஜன்னல் மற்றும் கதவு போன்றவை திருத்தம் செய்யப்பட வேண்டி உள்ளதென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-7-19)

## கிரிக்கெற் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெற் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இந்நிகழ்விக்கு பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக்கழக கிளை முகாமையாளர் ஏ.சத்தியமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளார். (ஸ்ரீ-4-3)

## இலவச யோகாசன பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வரும் இலவச யோகா சன பயிற்சி வகுப்புகளில் புதிய பிரிவுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

மேலும் இப்பயிற்சி வகுப்புகள் ஆண்கள், பெண்கள் , நோயாளர்கள் என 3 பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

எனவே இதில் கலந்துகொள்ள விரும்புவோர் தங்களது பெயர் விபரங்களை நாவலர் மணிமண்டபத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)




## விவசாய விலங்கு வேளாண்மை கண்காட்சி இன்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

விவசாய விரிவாக் கல் திணைக்களம் , விவசாய ஆராய்ச்சி திணைக்களம் , யாழ். பல்கலைக்கழக விவ சாய பீடம்,கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,கமநல அபிவிருத்தித் திணைக்களம்,சுதேச மருத்துவ திணைக்களம்,நீர்ப்பாசனத் திணைக்களம்,வானிலை அவதான நிலையம், தென்னைப் பயிர்ச்செய்கை சபை,பனைவள அபிவிருத்தி சபை ஆகியன இணைந்து நடத்தும் ''சந்தைப் பொருளாதாரத்தை நோக்கிய சூழல் பாதுகாப்புடனான விவசாய உற்பத்தி'' என்னும் தொனிப்பொருளிலான விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி நாளை மறுதினம் திங்கட்கிழமை வரை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், விவசாய ஆராய்ச்சி நிலையம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், வானிலை அவதான நிலையம், கமநல அபிவிருத்தித் திணைக்கள விவசாயிகள் கூடம் இணைந்த வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு வைபவரீதியாக கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஸ்ரீ-4)

## சாரணர்களுக்கான பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண இலங்கை சாரணர் சங்கத்தினால் சாரணர்களுக்கான கலைக்கூறு I,II மற்றும் அணித்தலைவர்களுக்கான பயிற்சிகள் யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றுவருகின்றன.

இதில் கலைக்கூறு- II மற்றும் அணித்தலைவர்களுக்கான பயிற்சிகள் நேற்று மாலை 2.30 மணிக்கு ஆரம்பமாகியுள்ளதுடன் இப்பயிற்சி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிவரையும் நடைபெறவுள்ளது. மேலும் கலைக்கூறு I இற்கான பயிற்சி இன்றும் நாளையும் காலை 8.30 மணி முதல் 4.30 மணிவரையும் நடைபெறவுள்ளது.

அத்துடன் அறுவர் தலைவர் பயிற்சி இன்று சனிக்கிழமை காலை 8 மணிமுதல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் விண்ணப்பதாரிகள் அல்லது விருப்பமுடையோர் கலந்துகொள்ளுமாறு வடமாகாண சாரண ஆணையாளர் ரி.என். போஜன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## சேதமடைந்துள்ள வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(சுன்னாகம்)



சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி சுன்னாகம் சந்திக்கும் மருதனார்மடம் சந்திக்கும் இடையில் இராமநாதன் கல்லூரிக்கு அண்மித்ததாக உள்ளது.

மேலும் இவ்வீதிக்கு அருகில் புற்றுநோயாளர் காப்பகமான கேன் நிறுவனம், மயிலிட்டி கலைமகள்வித்தியாலயம், விழிப்புலன் வலுவிழந்தோர் வாழ்வகம் மற்றும் இடம் பெயர்ந்த மக்களின் குடியிருப்புக்கள் ; என்பன காணப்படுகின்றன. இதனால் இவ்வீதியால் பெருமளவான மக்கள் நாளாந்தம் பிரயாணம் செய்கின்றனர்.

இந்த நிலையில் இப்பகுதி கிராம அலுவலரின் முயற்சியால் இலகு வேலைத் திட்டத்தின் மூலம் இவ்வீதியிலுள்ள குழிகள் மண் இட்டு நிரப்பப்பட்டது.

ஆனால் இனிவரும் மாரி காலத்தில் ஏற்படும் நீர்த் தேக்கத்தினால் இவ்வீதி மேலும் மோசமாக காணப்படலாம் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ்வீதியினூடாக பயணம் செய்யும்போது வீதி விபத்துக்கள் ஏற்படலாம் எனவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.எனவே எதிர் வரும் மாரிகாலத்திற்கு முன்னர் உரிய அதிகாரிகள் இவ்வீதியை புனரமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-4-54)

## கைவினையில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தித் தரத்தினை விருத்தி செய்யும் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் கைவினையில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு அவர்களது உற்பத்தி தரத்தினை விருத்தி செய்வதற்கான புதிய நுட்பங்களைக் கொண்ட பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதற்கு முன்னோடியாக விழிப்புணர்வு பயிற்சி கருத்தரங்குகள் கீழ்க்குறித்த இடங்களில் நடத்தப்படவுள்ளன. இதில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்கு கைவினை உற்பத்தியாளர்களுக் கும் சங்கானை பிரதேச செயலகத்தில் சங்கானை , சண்டிலிப்பாய், காரைநகர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கைவினை உற்பத்தியாளர்களுக்கும் கரவெட்டி பிரதேச செயலகத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட கைவினையில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்களுக்கும் இக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளது.

மேலும் 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்களுக்கும் ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்களுக்கும் பிற்பகல் 1 மணிக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் தெல்லிப்பளை, உடுவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கைவினையில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்களுக்கும் இக்கருத்தரங்குகள் நடைபெறவுள்ளது. பனை சார்ந்த கைவினைப் பொருட்கள், மரக் கடைச்சல் வேலைகள், உலோக கடைச்சல், உலோக உற்பத்தி, ஆபரண உற்பத்தி போன்ற துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

எனவே கைவினையில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்கள் தமது மாதிரி உற்பத்திகளுடன் தத்தம் பிரதேச செயலக பிரிவுகளுக்கு குறித்த திகதிகளில் சமுகமளித்து குறித்த பயிற்சியினைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

# சுரேஷ் பிரேமச்சந்திரனின் கருத்துக்கு வன்னி மாவட்ட ஆசிரியர்கள் பதில்

(யாழ்ப்பாணம்)

"உரிய நேரத்துக்கு கடமைக்குச் செல்லுமாறு வன்னிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு பணிப்பு" என்ற தலைப்பில் 16.09. 2010 அன்று வலம்புரியில் வெளியான சுரேஷ் பிரேமச்சந்திரனின் கருத்துக்கு பதிலளித்து வன்னி மாவட்ட ஆசிரியர்கள் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அறுபத்தெட்டு (68) ஆசிரியர்கள் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள கடிதம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

கடிதத்தின் விபரம் வருமாறு:

ஆசிரியர்,

வலம்புரி,

"வன்னிப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள், உரிய நேரத்துக்கு கடமைக்கு சமுகமளிக்காமையினால் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்" எனும் செய்தியைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியிருந்தார் எனும் செய்தியை தங்களின் 16.09. 2010 அன்று வெளிவந்த வலம்புரிப்பத்திரிகையின் ஊடாக அறிந்தோம். இதனையிட்டு மிகுந்த வேதனை அடைகிறோம்.

பகிரங்க வெளியில்- பொதுப்படையாக- எழுந்த மாதிரியாகக் கூறப்பட்ட இத் தகவல் பல்வேறு அசௌகரியமான நிலையிலும் யாழ்ப்பாணத்திலிருந்து உரிய நேரத்துக்குச் செல்லும் [illegible] போன்ற ஆசிரியர்களுக்கு மன வேதனையையும் மீளாத்துயரத்தையும் அளிக்கிறது.

அதிகாலையில் 4 மணிக்கு எழுந்து உரிய நேரத்துக்கு கடமைக்குச் சமுகமளிக்கும் ஆசிரியர்கள் பலர் அன்றும் இன்றும் என்றும் உள்ளனர். இத்தகைய ஆசிரியர்களே தார்மீக சிந்தனையுடன் வன்னியில் பொது அபிவிருத்திப் பணிகளிலும் முன்னிக்கிறார்கள். ஆயினும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் கூறியது போல் ஒரு சிலர் உரிய நேரத்துக்குப் பாடசாலைக்கு செல்வதுமில்லைத்தான். ஆனால் ஒரு சிலர் செய்யும் பிழைக்கு அத்தனை ஆசிரியர்கள் மீதும் சேறுபூசும் இச்செயல் கண்டிக்கத்தக்கது.

கடந்த கால அனுபவங்களை மீட்டுப் பார்த்தும் அவருக்கு நாடாளுமன்ற பதவியை தமிழ் மக்களாகிய நாங்களே மீண்டும் வழங்கியிருந்த இத் தருணத்தில் எமக்கு செய்ய வேண்டிய சேவைகள் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினருக்கு உள்ளது.

உதாரணமாக எமது ஆசிரியர்கள் பலருக்கு தகுதியிருந்தும் இடமாற்றம் வலயத்தால் மறுக்கப்பட்டு வருகின்றது. (Maths, Science) முறையாக ஆசிரியருக்கு வழங்கப்பட வேண்டிய படிகள் பாடசாலை தொடங்கியும் இன்றளவும் வழங்கப்படாமலே உள்ளன. ஆசிரியருக்குரிய சம்பளப்பிரச்சினைகள் தீர்க்கப்படாமலே உள்ளன. பல ஆசிரியர்களுக்கு மூன்று வருடம் முடிந்த நிலையிலும் பதவி உறுதிப்படுத்தும் கடிதங்கள் இன்னமும் வந்து சேரவில்லை.

அத்துடன் வன்னியில் இயங்கும் பெரும்பாலான பாடசாலைகள் அடிப்படை வசதி இன்றியே இயங்குகின்றன. பல ஆசிரியர்கள் பஸ் போக்குவரத்துச் சீரின்மையால் அவதிப்பட்டு அல்லலுற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவற்றை உரியவர்களிடம் கதைத்து எமக்குரியவற்றை பெற்றுத்தரவேண்டிய நிலையிலுள்ள கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் இவை எதனையும் பொருட்படுத்தாது எழுந்த மாதிரியாக ஆவேசமாகக் கருத்துத் தெரிவிப்பது வேதனை தருகிறது.

பொறுப்புள்ள பதவியில் இருப்பவர்கள் எமக்கு உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை ஆனால் எம்மை உங்களின் பிரத்தியேக நலன்களுக்காக அசிங்கப்படுத்தாதீர்கள் எனப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வன்னி மாவட்ட ஆசிரியர்கள்.

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சட்டத்தரணி சபா ரவீந்திரன் எழுதிய பராமரிப்புச் சட்டம் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அதிபர் கே.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் மல்லாகம் மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் பிரதம விருந்தினராகவும் பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவாவும் கலந்து கொள்கின்றனர். (ச-6)

# பொல்லார்ட் சிக்ஸர் மழை

## ஹயானா அணியை வீழ்த்திய மும்பை அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்தது



(டர்பன்)

பொல்லார்ட்டின் அதிரடியில் மும்பை இந்தியன்ஸ் அணி 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஹயானா அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி தொடரில் தான் விளையாடிய மூன்றாவது போட்டியில் முதலாவது போட்டியில் வெற்றி பெற்று அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்தது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் சம்பியன் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்றுமுன்தினம் டர்பனில் நடைபெற்ற லீக் சுற்றில் 10ஆவது போட்டியில் பிரிவு பி சேர்ந்த மும்பை இந்தியன்ஸ் அணியும் மேற்கிந்தியத்தீவுகளின் ஹயானா அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மும்மை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 184 ஓட்டங்களை குவித்தது.

இதில் ஆட்டமிழக்காமல் பொல்லார்ட் 30 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 9 சிக்ஸர்கள் அடங்கலாக) 72 ஓட்டங்களையும் அணித்தலைவர் சச்சின் டெண்டுல்கர் 39 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 48 ஓட்டங்களையும் டாவான் 37 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட, ஒரு சிக்ஸர் உட்பட) 39 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் பிஸ்கோ 3 விக்கெட்டுக்களையும் கிராண்டன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 185 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ஹயானா அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 153 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ராம்நரேஷ் சர்வான் 38 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 46 ஓட்டங்களையும் டியோனரைன் 27, பார்ன் எவஸ் 24, கிராண்டன் 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிராவோ, ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சகீர் கான், மலிங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி தான் விளையாடிய மூன்றாவது போட்டியில் முதலாவது வெற்றியைப் பெற்று தொடரில் இரண்டு புள்ளிகளை பதிவு செய்து அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்தது.

இப் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியின் பொல்லார்ட் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து அன்ரூ பிளின்டொப் ஓய்வு

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து இங்கிலாந்து சகலதுறை வீரர் பிளின்டொப் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் சிறந்த சகல-துறை வீரராக விளங்கியவர் அன்ரூ பிளின்டொப் (32வயது). கடந்த 1998 இல் நோட்டிங்காமில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார். இதுவரை இவர் 79 டெஸ்ட் (3845 ஓட்டங்கள் 226 விக்கெட்டுக்கள்) 141 ஒருநாள் (3394 ஓட்டங்கள் 169 விக்கெட்டுக்கள்) மற்றும் 7 சர்வதேச இருபது -20(76 ஓட்டங்கள் 5விக்கெட்டுக்கள்) போட்டிகளில் விளையாடியுள்ளார்.

டெஸ்டில் ஓய்வு

முழங்கால் காயம் காரணமாக கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடந்த ஆஷிஸ் டெஸ்ட் தொடருக்குப்பின் டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வை அறிவித்தார்.


ஐ.பி.எல். அனுபவம்


அதன்பின்னர் கடந்த 2009 இல் தென்னாபிரிக்காவில் நடந்த ஐ.பி.எல். இருபது-20 தொடருக்கான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் அதிகபட்சமாக ரூ.7.5 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஆனால் முழங்கால் காயம் காரணமாக இத் தொடரின் பாதியில் சொந்த ஊர் திரும்பினார்.

முழங்கால் காயத்திற்கு சமீபத்தில் சத்திர சிகிச்சை செய்துகொண்ட போதிலும் இவரால் மீண்டும் சர்வதேச போட்டியில் பங்கேற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நேற்று முன்தினம் ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் இருந்து முறைப்படி ஓய்வை அறிவித்தார்.












கொமர்ஷல் லீசிங் நிறுவனத் திறப்பு விழா நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் கொமர்ஷல் குழுமத்தின் நிறைவேற்று அதிகாரி கபில ஜெயவர்த்தன அலுவலகக் கட்டிடத்தை திறந்துவைப்பதையும் முதலாவது கடன் வசதியை வழங்குவதையும் பிரதிப் பிரதம நிறைவேற்று அதிகாரி கிருஷான் திலகரத்தின வாடிக்கையாளர் ஒருவருக்கு லீசிங்கில் பெறப்பட்ட வாகன திறப்பை கையளிப்பதையும் அருகில் முகாமையாளர் பிரணவன் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் ஆர்.சந்திரகாந் ஆனைக்கோட்டை)

# மீளக் குடியமரும் வன்னி மக்கள் வாக்காளர் டாப்பை திருத்த வசதி

## மேலதிக தேர்தல் ஆணையாளர் தகவல்



யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீளக்குடிய மரும் மக்கள் இவ்வருட இறுதிக்குள் வாக்காளர்கள் இடாப்பில் திருத்தத்தை மேற்கொள்ள முடியும் என மேலதிக தேர்தல் ஆணையாளர் பி.எம். சிறிவர்த்தன தெரிவித்தார்.

2010 ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வு தொடர்பாக ஆராயவென வடக்குக்கு விஜயம் செய்த அவர், நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். இந்நிலையில் நேற்று யாழ் .செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக வடக்குக் கிழக்கில் வாக்காளர் இடாப்பில் திருத்தங்களை மேற்கொள்ள முடியாமல் போனது. இதனால் ஒழுங்கான முறையில் வாக்களிப்பு இடம்பெறுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் இருந்தன.

தற்போது யுத்தம் நிறைவு பெற்றுள்ள நிலையில் வீடுவீடாகச் சென்று படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வாக்காளர் டாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2009ஆம் ஆண்டின் வாக்காளர் டாப்பின் பிரகாரம் 2 இலட்சத்து 67 ஆயிரத்து 311 பேரின் அடையாளஅட்டை இலக்கங்கள் வாக்காளர் இடாப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் உறவினர்கள்,நண்பர்களின் வீடுகளில் வசிப்பதால் வாக்காளர் இடாப்பு சரியான முறையில் பதிவு செய்யப்படவில்லை.

ஆனால் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். இவர்கள் தமது வாக்காளர் டாப்பை திருத்துவதற்கு வசதியாக கிளிநொச்சியில் தற்காலிக தேர்தல் அலுவலகம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் கிளிநொச்சி மக்கள் பயன் பெறமுடியும். வடக்கில் வாக்காளர் இடாப்புத் திருத்தம் கடந்த யூன், யூலை மாதங்களில் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டன.

எனினும் வடக்கில் மீள்குடியமர்வுகள் இடம்பெற்று வருவதால் இவ்வருட இறுதிவரை வாக்காளர் இடாப்புகள் மீளாய்வு செய்ய மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு கிராம அலுவலர்களுக்கு அறிவுறுதப் பட்டுள்ளது.

அதேபோன்று உயர்பாதுகாப்பு வலயப் பகுதி மற்றும் நலன்புரி முகாமிலுள்ள மக்கள் தமது சொந்த முகவரியில் வாக்காளர் டாப்பில் பதியவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று தொழில் மற்றும் கல்விச் செயற்பாட்டிற்காக வெளிநாட்டுக்குச் சென்றவர்களையும் வாக்காளர் இடாப்பில் உள்ளடக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் வி.குகநாதன், வவுனியா மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் வி.கருணாநிதி, கிளிநொச்சி உதவி தேர்தல் ஆணையாளர் சுதாகர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (சு)

## பிரதமர்...

இச்சம்பவத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்த பிரதமர் சம்பவத்தில் மரணமடைந்த மற்றும் காய மடைந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்புக் கொடுப்பனவும் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

பிரதமருடன் சீன நாட்டுத் தூதுவர் யாங் க்ஷூப்பிங் மற்றும் சீன நாட்டுத்தூதரக அதிகாரிகள், பொலிஸ்மா அதிபர் மகிந்த பால சூரிய, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிழக்கு மாகாணத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் எடிசன் குணதிலக ஆகியோரும் சென்றிருந்தனர்.

பிரதமர் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டார். இச்சம்பவம் தொடர்பாக முழு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு இதன் போது பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டார். இதன் போது அரசாங்க பகுப்பாய்வுத்திணைக்கள அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர்.

இதேவேளை கரடியனாறில் வெடிப்புச்சம்பவம் இடம் பெற்ற இடத்துக்கு மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் சென்று பார்வையிட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் இராணுவ அதிகாரிகளிடமும் கலந்துரையாடியுள்ளார். (சு-5)

## டைனமற் கொள்கலன்...

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் நிலயத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற விபத்தில் 25 பேர் பலியாகினர். 16 பொலி ஸாரும் 07 பொதுமக்களும் பலியானதுடன் 2 சீனப்பிரஜைகளும் பலியானதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் அறிவித்துள்ளார். 50 பேருக்கு மேற்பட்டோர் படுகாய மடைந்ததாகவும் அவர் கூறினார்.

முன்னதாக இச்சம்பவத்தில் 60 பேர் கொல்லப்பட்டதாக வெளியாகியிருந்த செய்திகளை இராணுவத்தினரும் பொலிஸாரும் நிராகரித்துள்ளனர்.

கல்வெடி மருந்துகளை ஏற்றிய மூன்று கொள்கலன்கள் (கன்டெய்னர்கள்) அடுத்தடுத்து வெடித்ததைத் தொடர்ந்து இந்த விபத்து ஏற்பட்டதாக இராணுவப் பேச்சாளர் உபய மெதவல தெரிவித்துள்ளார்.

இந்த டைனமெட்டுக்கள் சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது. புலிகளுடனான போர் முடிபுக்கு வந்ததை அடுத்து நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப்பகுதிகளில் சீனா பல இரகசிய இராணுவத் தளங்களை உருவாக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இதனால் இந்தப்பகுதிகளில் சீனர்களின் நடமாட்டம் மிகவும் அதிகமாகவே உள்ளது. இவர்கள் வீதிகள், பாலங்கள், அணைகள் கட்டவே வந்துள்ளதாக இலங்கை கூறுகிறது.

இந்நிலையில் கரடியனாறுப் பகுதியில் வீதி அமைக்கும்பணியில் சீன அரசுக்கு சொந்தமான சைனா ஓவர்சீஸ் ஹோற்டிங்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த நிறுவனத்துக்காக கொண்டு வரப்பட்ட டைனமெட்டுக்கள் வெடித்து விபத்து ஏற்பட்டதாகவும் இலங்கை கூறியுள்ளது.

இது ஒரு விபத்துத்தான் என்றும் இதில் சதி எதுவும் இல்லை என்றும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது. இந்த விபத்தில் கரடியனாறு பொலிஸ் நிலையம் தரைமட்டமாகிவிட்டது.

அதிலிருந்த பெரும்பாலான பொலிஸார் பலியாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. மேலும் பலியானோர் எண்ணிக்கையும் 70 வரையிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

சம்பவம் நடந்த இடம் முன்பு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொள்கலன் ஒன்றை துப்புரவு செய்துவிட்டு அதன் கதவைப் பூட்டிய போது பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியதாக சீன நிறுவனத்தின் சாரதி ஒருவர் தெரிவித்தார். வெடி பொருட்களைக் கொண்டு செல்வ தற்கு தயாரான நிலையில் வைத்துவிட்டுத் திரும்பும் போதே இச்சம்பவம் இடம்பெற்றதாக அவர் கூறினார்.

### கட்டடங்கள் சேதம்

இவ் வெடிப்புச் சம்பவத்தில் பொலிஸ் நிலையம் அதற்கு அருகிலிருந்த கமநல சேவை நிலையம் என்பன முற்றாக சேதமடைந்துள்ளன. அங்கு நின்ற வாகனங்கள், மூன்று கொள்கலன்கள் என்பன மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையம் மற்றும் கமநல சேவை நிலையம் என்பவற்றிலிருந்த பொது மக்கள் கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து காயங் களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ் வெடிச் சம்பவத்தில் மட்டக்களப்பு நகரம் அதிர்ந்ததாக பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

இதேவேளை யுத்தம் நிறைவடைந்து ஒரு வருடம் கடந்த நிலையில் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்று அதில் அதிகளவான பொதுமக்கள் கொல்லப்பட்ட முதலாவது சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவத்தை அடுத்து கரடியனாறு பகுதி சோகமயமாக காட்சியளிக்கின்றது. (சு-5,6)

## ஜனாதிபதி...

இந்தப் பிரதேசங்களை சேர்ந்த மக்கள் ஆணைக் குழுவின் முன் தமது கருத்துக்களை முன் வைக்கமுடியும் என ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்த உடன்படிக்கை செயலிழந்தமை உள்ளிட்ட சில விடயங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதியினால் இந்த ஆணைக்குழு நியமிக்கப் பட்டது. ஏற்கனவே ஆணைக்குழு, கொழும்பிலும் வவுனியாவிலும் கூடி சாட்சியங்களை பதிவு செய்து கொண்டுள்ளதுடன் ஜனாதி பதியிடம் நடைபெற்ற விசாரணைகள் தொடர்பான இடைக்கால அறிக்கையையும் சமர்ப்பித்துள்ளது. (சு-5)

## இலங்கை மனி...

ஆர்ப்பாட்டம் ஒன்று இலங்கைப் போரின் இறுதிக்கட்டத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கு காரணமானவர்களை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து ஆலோசனை கூறுவதற் காகவே இந்த மூன்று பேர் கொண்ட குழு கடந்த யூன் மாதத்தில் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் நியமனத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது. அதன் உறுப்பினர்கள் இலங்கைக்குள் வர அனுமதிக்கப் படமாட்டார்கள் என்று இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார்.

இந்தக் குழுவை வாபஸ் பெறவேண்டும் என்று கூறி இலங்கையின் மற்றுமொரு அமைச்சரான விமல் வீரவன்சவும் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியிருந்தார். ஆனால் அதனை அவர் பின்னர் கைவிட்டார். (சு-5)

## சீன அரச...

பகுதிக்குச் சென்றது.

வெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்ட 25 பேரில் இரண்டு சீனப் பிரஜைகளும் உள்ளடங்குவதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (சு-5)

## முறையான...

பங்களைத் தெரிவித்தார்.

இதேவேளை இச் சம்பவத்தில் 60 பேருக்கு அதிகமான வர்கள் கொல்லப்பட்டதாக ஆரம்பத்தில் செய்திகள் வெளியாகிய போதும் குறைந்த பட்சம் 25 பேர் கொல்லப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் உபய மெதவெல நேற்று மாலை தெரிவித்தார்.

இறந்தவர்களில் 16 பேர் பொலிஸார் எனவும் 7 பொதுமக் களும் சீன பிரஜைகள் இருவரும் பலியானதாகவும் அவர் கூறினார்.

வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக கொண்டு செல்லப்பட்டு கரடியனாறு பொலிஸ் நிலையவளாகத்தில் வைக்கப்பட்டிருந்த பாறைகளைத் தகர்ப்பதற்கான வெடிமருந்துகள் அடங்கிய கொள்கலன் வெடித்ததால் இந்த அனர்த்தம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சு-5)

## முன்னாள் தளபதி பொன்...

முப்படைகளின் தலைவரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சிபார்சு செய்துள்ளது. சரத் பொன்சேகாவின் மருமகன் நடத்திய கம்பனி ஊடாகவே இந்த ஊழல் மோசடி இடம்பெற்றதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த மாதம் முதலாவது நீதிமன்றில் குற்றவாளியாகக் காணப்பட்ட சரத் பொன்சேகாவின் பதக்கங்களை பறித்த நீதிமன்றம் அவருடைய ஓய்வூதியத்தையும் இரத்துச் செய்திருந்தது. 59 வயதான சரத் பொன்சேகா விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தை தலைமையேற்று நடத்திய தளபதி என்பதோடு கட ந்த ஜனவரியில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (சு-5)

## வடமராட்சி கிழக்கில்...

யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

இதேவேளை மேற்படி கிராமசேவையா ளர் பிரிவுகளைச் சேர்ந்த உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் வாழ்பவர்கள் தற்போதுள்ள பிரிவுகளில் உள்ள தங்களது பதிவுகளை நீக்கி செம்பியன் பற்று வடக்கு, செம்பியன் பற்று தெற்கு ஆகிய பிரிவுகளுக்கு எதிர்வரும் 21 ஆம் திகதியும் மருதங்கேணி, வத்திராயன் ஆகிய பிரிவுகளுக்கு 23 ஆம் திகதியும் உடுத்துறை, ஆழியவளை ஆகிய பிரிவுகளுக்கு 28 ஆம் திகதியும் மருதங்கேணி உதவிஅரசாங்க அதிபர் மணிமனையில் பதிவுகளை மேற்கொண்ட பின்னர் சுயமாகதமதுசொந்த இடங்களில் மீளக்குடி யமருமாறுஅரசஅதிபர்அறிவித்துள்ளார். (சு)

INVITATION
EDITION ACADEMY
Performance Appraisal -2010
Date :- 19th September @ 10 a.m
Venue :- Cumaraswamy Hall
Jaffna Hindu College
Chief Guest
Mrs.A.Vethanayagam
Director, Zonal Education.Jaffna.
Special Guest
MrS.Thiyagalingam
Principal, J/Hindu Primary School.
Know our Students's talents | Feel the unique difference in our activity
Achieve future stability through English.
All are well come
The Director
& the members of the staff.
(2489)

CIMA-UK UNTIL NOW 100% PASS
MCS
High qualified, well experienced lecture panel with TOP CIMA holders
Supported By UNDP/JRRP
SMS your name & course to 0772 395 895
324,Palaly Road,Parameswara Junction
Golden Opportunity
12000/= 2000/=
Free : ICDL, Toefl-English

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.